# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 06

19.02.2023



உணவுக்காடு ஒன்று அமைத்திடுவோம் 08



புதிய வரிக்கொள்கைகளை ஏற்கமறுக்கும் ..... 10



குறைந்த செலவில் அசோலா உற்பத்தி 24

# மின்சார சபை தந்திருக்கும் "ஷொக்"!



பேராசிரியர் அமித்தலிங்கம் செவ்வி

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை மின்சாரக் கட்டண உயர்வு ஏற்படுத்தும்

## பேராசிரியர் அமிர்தலிங்கம்





நேர்கண்டவர்
பி.பார்த்தீபன்

“மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பது இலங்கைக்குள்ளேயே அனைத்து உற்பத்திகளையும் பாதிக்கப்போகின்றது. அனைத்து விலைகளும் கூடப்போகின்றன. பொருளாதாரத்தில் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். மின்சார சபையின் நட்டத்தைப் போக்குவதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளின் பின்விளைவுகளையிட்டும் அரசாங்கம் யோசிக்க வேண்டும்” என்று எச்சரிக்கின்றார் கொழும்பு பல்கலைக் கழக பொருளியல்துறை பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்.

“தமிழர் பொருணமியம்” வாரஇதழுக்கு வழங்கிய விசேட நேர்காணல் ஒன்றிலேயே இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு-

**கேள்வி -** மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தில் உதவி கிடைக்கும் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டிருக்கின்றார். அதற்கான சாத்தியக் கூறுகள் எந்தளவுக்குக் காணப்படுகின்றன?

**பதில் -** சர்வதேச நாணய நிதியத்தின் உதவியானது 48 மாதங்களுக்கானது. அதாவது நான்கு வருடங்களுக்கானது. இது 2.9 பில்லியன் டொலர் நிதி உதவியாகும். இதுகூட சர்வதேச நாயண நிதியத்தின் நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு நிறைவேற்றுகின்றது என்பதன் அடிப்படையில் கட்டம் கட்டமாக வழங்கப்படும்.

தற்போது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினையாக இருக்கின்ற வருமானக் குறைவு, செலவீனங்களின் அதிகரிப்பு, அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவது குறைக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் பிரதானமாக இருக்கின்றன. இதன் அடிப்படையில்தான் அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இதில் பிரதானமானது கடன் கொடுத்த நாடுகளும் நிறுவனங்களும் இலங்கைக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் விரும்புகின்றது. அந்த வகையில் இலங்கைக்கு அதிகளவுக்கு கடனைக்கொடுத்திருக்கின்ற சீனா தன்னுடைய பதிலை இதுவரையில் வழங்கவில்லை. இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியபோதிலும், சீனா இன்னும் மௌனமாகவே இருக்கின்றது.

இலங்கைக்கு மட்டுமன்றி பாகிஸ்தானுக்கும் சீனா பெருமளவு கடனை வழங்கியிருக்கின்றது. பாகிஸ்தான் விடயத்திலும் சீனா அமைதியாக இருக்கின்றது. சீனாவின் பதில் தாமதமானால் ஜனாதிபதி சொல்வது போலச் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மார்ச் மாதத்தில் கிடைக்கும் என்பது சாத்தியமற்றதாகலாம். சீனாவின் பதில் சாதகமானதாக இருந்தால் மார்ச் மாதத்தில் உதவி கிடைப்பது சாத்தியமானதாகலாம். சீனாவின் நடவடிக்கையில்தான் இவை தங்கியுள்ளன.

**கேள்வி -** தற்போது பாரியளவில் அதிகரிக்கப்பட்டிருக்கும் மின்சாரக் கட்டணம் இந்த நிபந்தனையின் வெளிப்பாடுதானா?

**பதில் -** ஆம். நிச்சயமாக. அவர்களுடைய நிபந்தனையை நிறைவேற்றுவதற்காகத்தான் இதனைச் செய்ய வேண்டியிருந்தது. வரி வருமானம் கடுமையாக அதிகரிக்கப்பட வேண்டும் என்பது முதலாவது நிபந்தனை. அதனால் இன்று பல்வேறு பலமான தொழிற்சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தத்தைச் செய்திருக்கின்றன. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வைக் கொடுக்காவிட்டால் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் ஒன்றில் இறங்கப்போவதாக அனைத்துத் தொழிற்சங்கங்களும் அறிவித்திருக்கின்றன.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் நட்டத்தைக் குறைக்க வேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை. அதற்

காகத்தான் மின்சாரக் கட்டணம் இந்தளவுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு இதுவும் போதாது. உண்மையில் இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவையும் போதுமானதல்ல. நான் நினைக்கிறேன். இது ஒரு முதலாவது படியாக இருக்கலாம் என நான் நினைக்கிறேன். இதனைவிட போக்குவரத்துக் கட்டடங்கள் அதிகரிக்கலாம். இவை அனைத்தையும் செய்யும் போது மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்கப் போகின்றார்கள்.

இந்த இடத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் எந்தளவுக்கு சாத்தியமானவை என்ற கேள்வியும் இருக்கின்றது.

**கேள்வி -** இந்த வகையில் அடுத்ததாக வரக்கூடிய விலை அதிகரிப்பு அல்லது கட்டண அதிகரிப்பாக எது இருக்கலாம்?

**பதில் -** இப்போது மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. புகையிரதக்கட்டணம், பெற்றோல் உட்பட எரிபொருட்களின் விலை, போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம். இவற்றைவிட பல அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப் படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

செலவீனக்குறைப்புக்கள் பெருமளவுக்கு இருக்கப்போகின்றன. இப்போது மூலதனச் செலவுகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டிருக்கின்றன. நடைமுறைச் செலவுகளைக் குறைக்குமாறு தொடர்ச்சியாக பல்வேறுபட்ட அரச நிறுவனங்களுக்கு அரசாங்கம் சுற்றறிக்கைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றது. கடுமையான செலவீனக்குறைப்பு இடம்பெறுகின்றது.

**கேள்வி -** அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடபகுதியின் அபிவிருத்தி தொடர்பாகவும் பேசியிருந்தார். அவர் சொன்னது போல நடைபெறுவது சாத்தியமா?

**பதில் -** அவர் சொல்வது போல வடபகுதிக்கான அபிவிருத்தியை துரிதப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தாலும் அதற்கான நிதி அவரிடம் இருக்கின்றதா? என்று கேட்டால், இல்லை என்றுதான் நான் சொல்வேன். இப்போது அதற்கு சாதகமான ஒரு நிலைமை காணப்படவில்லை. நாடுமுழுவதிலுமே வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு திட்டங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. இப்போது மூலதனச் செலவீனத்தை அதிகரிக்கும் வகையிலான எந்தச் சூழ்நிலையும் இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்படவில்லை. அதற்கான விருப்பம் இருக்கலாம். ஆனால், அதற்கான சாத்தியங்கள் இல்லை.

**கேள்வி -** போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கருத்தை அவர் முன்வைத்திருந்தார். அதற்கான சாத்தியக்கூறுகள் கூட இல்லை என்று சொல்கின்றீர்களா?

**பதில் -** தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான பணம்கூட இல்லை என்று அரசாங்கம் சொல்லும் நிலையில், மிக அத்தியாவசியமான செலவுகளைக்கூட செய்ய முடியாத கட்டத்தில்தான் அரசாங்கம் இருக்கின்றது. ஏனெனில் செலவீனங்களை இன்னும் கணிசமானளவுக்குக் குறைக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கின்றது.

இலங்கையின் மொத்த வருமானம் நடைமுறைச்செலவுகளுக்குக்கூட போதுமானதாக இல்லை. ஒரு ரில்லியன் தொகை துண்டுவிழுகின்றது. வட்டிக்கொடுப்பனவைச் செய்வதற்கு இன்னொரு ரில்லியன் தேவைப்படுகின்றது. இது மூலதனச் செலவுகளுக்கு மேலதிகமான தொகை. இவ்வாறு இரண்டு ரில்லியன் தொகை பற்றாக்குறையாக இருக்கும்போது, இதனைத்தாண்டி அரசாங்கம் செலவு செய்வது என்பது இயலாத காரியம்.

> *“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வது போல, வடபகுதிக்கான அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தாலும் அதற்கான நிதி அவரிடம் இல்லை. இப்போது அதற்கு சாதகமான ஒரு நிலைமை காணப்படவில்லை.”*

**கேள்வி -** உள்ளுராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு பணம் இல்லாத நிலையில், தபால் மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு?

**பதில் -** தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அரசாங்கம் நினைத்தால், வேறு சில செலவுகளைக் குறைத்துக்கொண்டு இதற்கான செலவீனத்தைக் கொடுக்க முடியும்.

ஆனால், தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறையாகவுள்ளது என்பதில் சந்தேகம் உள்ளது. ஏனெனில்இந்த நேரத்தில் தேர்தலை நடத்தினால் அதில் தமது வெறுப்பை மக்கள் வெளிப்படுத்துவார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அதனால், இந்தத் தேர்தலைப் பின்போட வேண்டிய தேவையும் அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

கிட்டத்தட்ட 28 இலட்சம் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு தலா பத்து கிலோ வீதம் கொடுப்பதற்காக அரசாங்கம் பெருமளவு பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கின்றது. இதன்மூலமாக அரசாங்கம் ஒரு செய்தியைச் சொல்வதற்கு முற்படுகின்றது. அதாவது, தேர்தலை நடத்துவதைவிட, வறிய மக்களுக்கு அரிசி கொடுப்பது முக்கியம் என்ற செய்தியை அரசாங்கம் சொல்வதற்கு முற்படுகின்றது.

**கேள்வி -** இந்தப் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு நீண்டகால அடிப்படையிலான திட்டம் ஒன்றுடன் அரசாங்கம் செயற்படுகின்றதா? அல்லது நிலைமைகளைச் சமாளிப்பதற்கான திட்டம் ஒன்றுடன் செயற்படுகின்றதா?

**பதில் -** என்னைப் பொறுத்தவரையில் நிலைமைகளைச் சமாளித்துக்கொண்டு செல்வதற்குத்தான் அரசாங்கம் முற்படுகின்றது. சாத்தியமான வரி செலுத்தவேண்டியவர்களை உள்ளே கொண்டுவருவதற்குப் பதிலாக, கண்ணுக்குத் தெரியும் சிலரை வரியைச் சுமக்க வேண்டும் என அரசாங்கம் நினைப்பது மிகவும் தவறானது. எந்த நிலைமையிலும் அரசாங்கம் அதில் வெற்றிபெற முடியாது.

இரண்டாவது, அரசாங்கத்தின் அதிகரித்த செலவீனத்துக்குப் பிரதான காரணியாக இருப்பது சில அரச நிறுவனங்கள். இவற்றை முக்கியமானது, சிறிலங்கன் எயார். அண்மைக் காலத்தில் அந்த நிறுவனத்தினால், 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மில்லியன் நட்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதேபோல, மின்வார சபை மிகவும் மோசமான நட்டத்தை அனுபவிக்கின்றது.

இவ்வாறு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றில் தனியார் மயப்படுத்த வேண்டும். அல்லது, அரசாங்கமும், தனியாரும் இணைந்து செயற்படுத்துகின்ற ஒரு தொழில்முயற்சிக்குள்கொண்டுவர வேண்டும். இவ்வாறான முக்கியமான விடயங்களை எல்லாம் அரசாங்கம் செய்வதற்கு முற்படாமல், சில சிறிய சிறிய விடயங்களைச் செய்ய முற்படுவது மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். உதாரணமாக மின்சாரக் கட்டண அதிகரிப்பு என்பது இலங்கைக்குள்ளேயே அனைத்து உற்பத்திகளை யும் பாதிக்கப்போகின்றது. அனைத்து விலை களும் கூடப்போகின்றன. பொருளாதாரத்தில் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

பெற்றோலுக்கான விலை அதிகரித்திருப்பதால் அதற்கான கேள்வி குறைவடைந்திருக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால் பெற்றோல் பாவனையாளர்கள் அதன் பாவனையைக் குறைக்கும் போது, சந்தைப் படுத்தல் செயற்பாடுகளும், உற்பத்திச் செயற்பாடுகளும் அதனால் பாதிக்கப்படும். இவை ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளன. அது போல மின்சாரக் கட்டண உயர்வு அனைத்து துறைகளையும் பாதிக்கும்.

மின்சார சபையின் நட்டத்தைப் போக்குவதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளின் பின்விளைவுகளையிட்டும் அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஆகவே அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதாரத்தை மிகவும் மோசமாகப் பாதிக்கப்போகின்றது.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777 276 949

# வெளிநாட்டுச் செலாவணியும் இளைஞர்கள் எதிர்காலமும்

நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்க வேண்டிய இளைய தலைமுறையினர் பெருமளவில் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதாக வரும் செய்திகளை வெறுமனே கடந்து சென்றுவிட முடியாது. அந்நியச் செலாவணி இதன்மூலம் கிடைக்கும் என்பதால் அரசாங்கம் இதனை ஊக்குவிக்கிறது. ஆனால், இதன் மறுபக்கத்தில் இளைய தலைமுறையினர் பெருமளவுக்கு வெளியேறுவதால் ஏற்படக் கூடிய நெருக்கடிகள் தொடர்பில் அரசாங்கம் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

நாட்டினுடைய தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு வெளிநாட்டுச் செலாவணி போதிய அளவில் கையிருப்பில் இல்லாதது பிரதான காரணம் என்பது உண்மைதான். வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மூலமாக குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் யதார்த்தமானதுதான்.


இருந்தபோதிலும் நாட்டிலிருந்து வெளியேறி செல்பவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் நாட்டிற்கு பணத்தை அனுப்பவேண்டும் என்பதற்காகவும் செல்பவர்களல்ல. நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக தம்முடைய எதிர்காலம் இங்கிருந்தால் இருள் மயமானதாக ஆகிவிடும் என்பதால் வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். படித்த இளைஞர்கள் பலர் தங்களுடைய கல்விக்கும் தகுதிக்கும் பொருத்தமான வேலை இங்கக் கிடைப்பது சாத்தியமில்லை என்ற நிலைமையிலேயே வெளியேறி செல்கின்றார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அது நீண்ட கால அடிப்படையில் சிந்தித்துச் செயல்படுவதாக தெரியவில்லை. குறுகிய கால நலன்களின் அடிப்படையில் அரசாங்க திட்டங்கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன. உடனடியாக குறிப்பிட்ட தொகை அந்நியச் செலவாணி வருகிறது என்பதற்காக நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியமான இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை அரசாங்கம் தடுக்க முற்படவில்லை.

நாட்டில் தொடர்ந்து இருப்பதால் அவர்களுடைய தகுதிக்கும் திறமைக்கும் பொருத்தமான வேலை வாய்ப்பும் அதற்குரிய வேதனமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டிருக்கவேண்டும். ஆனால், அதற்கான திட்டங்கள் கூட அரசாங்கத்திடம் இல்லை.

தகவல் தொழில்நுட்பத் துறையில் எதிர்காலத்தில் பெருமளவு வெற்றிடங்கள் நாட்டில் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதற்கான தயாரிப்புகளை இப்போதே மேற்கொள்ள வேண்டும். புத்திஜீவிகளான இளைஞர்கள் இந்த நாட்டில் தமக்குச் சிறந்த எதிர்காலம் இல்லை என்று கருதி வெளியேறும் நிலைமையில் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் எதிர்காலத்தில் வெளிநாடுகளில் இருந்து ஆட்களைக் கொண்டுவரவேண்டிய தேவை கூட ஏற்படலாம். அதனால் அரசாங்கம் நீண்ட காலத் திட்டமிடல் அடிப்படையில் இந்த விவகாரத்தைக் கையாள்வது முக்கியமானதாகும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....






## புலம்பெயர் தமிழர் முதலீடு

புலம்பெயர் தமிழர் முதலீடு செய்ய முன்வருவார்களா? என்ற உங்களுடைய கடந்த வாரக் கட்டுரை பல உண்மைகளை வெளிப்படுத்தியது. வெறுமனே அழைப்பு விடுப்பதற்கு அப்பால் அரசாங்கம் செய்ய வேண்டிய பல்வேறு வகையான வேலைகள் உள்ளதை அது படம் பிடித்து காட்டியது.

அரசாங்கம் இனநெருக்கடிக்குத் தீர்வைக் காண வேண்டும் என்று உண்மையாகவே விரும்பினால் அதற்கான செயற்பாட்டைத் துணிச்சலுடன் முன்னெடுக்கவேண்டும். பொருளாதார நெருக்கடிக்கும் அதன் மூலமாக தீர்வைக் காண முடியும். அதனை தமிழர் பொருண்மியம் வெளியிட்ட கட்டுரை தெளிவாக உணர்த்துகிறது.

**வே. கிருஷ்ணன், வெள்ளவத்தை, கொழும்பு.**

## அம்மாக்களின் சமையல்

உள்ளூர் தொழில் துறையாக வளர்ச்சியடைந்து வரும் அம்மாக்களின் சமையல் குறித்த கட்டுரையை கடந்த வாரம் படித்தேன். கட்டுரையாளர்கள் அதனையிட்டு சிறப்பாக எழுதியுள்ளார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண இது போன்ற துறைகளிலும் முதலீடு செய்வது அவசியம். அத்துடன் வறிய நிலையில் உள்ள பல குடும்பங்கள் இதனால் தமது வாழ்வாதாரத்தை பெறமுடியும்.

தமிழர் பொருண்மியம் இது போன்ற வேறு இடங்களில் நாம் படிக்க முடியாத கட்டுரைகளை தொடர்ந்தும் வெளியிட வேண்டும்.

**தங்கேஸ்வரி நடராஜா, கரவெட்டி.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தா தாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தா தொகையை Green media House Pvt Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House Pvt Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------
**முகவரி** - ----------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------
**செலுத்திய தொகை** - ----------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------




இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் நேற்றைய சந்தை விலை 1,71,700 ரூபா.

24 கரட் தங்கம் 1,87,250 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.






# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி** - கடன் அட்டைகளைப் பயன்படுத்தும் போது பல பலன்களும், சலுகைகளும் கிடைக்கின்றதுதானே? ஆனால், கடன் அட்டைப் பயன்பாட்டைத் தவிர்க்குமாறு பலரும் இலவச ஆலோசனை வழங்குவது எதற்காக?

கடன் அட்டைகளைப் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பயன்படுத்துவதால்தான் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. கிரெடிட் கார்ட் பயன்படுத்தும்போது பலரும் செய்யும் பொது வான தவறுகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் நாம் அந்தத் தவறுகளைச் செய்யாமல் இருக்கலாம்.

அவர்கள் செய்யும் முதலாவது தவறு குறைந்த பட்ச கொடுப்பனவு என்று வரும் தொகையைக் கட்டிவிட்டு சிவனே என்று இருப்பதுதான். இதனை அவர்கள் ஒரு கெட்டித்தனமாக நினைக்கின்றார்கள். மிகுதித் தொகைக்கு அதிகபட்ச வட்டி அறவிடப்படுவதை அவர்கள் கவனிப்பதில்லை.

இலங்கையின் தற்போதைய நிலையில் கடன் அட்டைக்கு 36 முதல் 40 வீதம் வரையிலான வட்டி அறவிடப்படுகின்றது. மாத இறுதியில் பில் வரும்போதுதான் அவர்கள் அதிர்ச்சியடைகின்றார்கள். ஆனால், மீண்டும் அதே தவறைச் செய்வதற்கு அவர்கள் தவறுவதில்லை.

அதனால் முடிந்தளவுக்கு முழுத் தொகையையும் செலுத்திவிட்டு இருப்பது நல்லது.

இரண்டாவது ஒரு பொருளை கொள்வனவு செய்யும் போது அல்லது, கடனட்டையைப் பயன்படுத்தி கடனை எடுக்கும் போது மாதாந்த கட்டணம் எவ்வளவு என்பதைச் சொல்வார்கள். இதைப் பார்க்கும் போது அதிஷ்ட தேவதை எம்மை கடைக்கண்களால் பார்ப்பது போல நாம் உணர்வோம். ஆனால், மாதாந்தம் பட்டியல் வரும் போதுதான் மறைமுகக் கட்டணங்களாக மாதாந்தம் கணிசமான ஒரு தொகையைக் கொடுத்துக்கொண்டிருப்பது புலப்படும்.

இது போன்றவற்றால் நொந்து போனவர்கள்தான் கடகட்டையை பயன்படுத்தும் போது எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும்என்பதற்கான இலவச ஆலோசனையை வழங்குவார்கள். முதலில் அந்த ஆலோசனை எமக்கு சலிப்பாக இருந்தாலும், ஏதாவது ஒரு பொருளை கடன் அட்டைக்கு வாங்கிய பின்னர் நாமும் படித்துக் கொள்வோம்.

**பா.செந்துாரன்,**
**கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 280/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 200/= |
| தக்காளி | - 260/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 80/= |
| கரட் | - 160/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 180/= |
| வாழைக்காய் | - 160/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 180/= |
| பாகற்காய் | - 320/= |
| வெண்டக்காய் | - 450/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 600/= |
| லீக்ஸ் | - 220/= |
| பீற்றூட் | - 180/= |
| கறிமிளகாய் | - 750/= |
| முருங்கைக்காய் | - 1500/= |
| போஞ்சி | - 350/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 246/= |
| கனடா டொலர் - | 266/= |
| சீன யுவான் - | 51/= |
| யுரோ - | 382/= |
| ஜப்பான் யென் - | 2.7/= |
| சிங்கப்பூர்டொலர் - | 268/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 431/= |
| சுவிஸ் பிராங் - | 386/= |
| அமெரிக்க டொலர் - | 359/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 257/= |
| கனடா டொலர் - | 278/= |
| சீன யுவான் - | 54/= |
| யுரோ - | 397/= |
| ஜப்பான் யென் - | 2.7/= |
| சிங்கப்பூர் டொலர் | 278/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 447/= |
| சுவிஸ் பிராங் - | 404/= |
| அமெரிக்க டொலா - | 369/= |



- ஆசி கந்தராஜா -

# முந்தானை முடிச்சும் முருங்கைக்காயும்

யாழ்ப்பாணத்து தண்ணியும், கைதடி முருங்கைக் காயும்தான், தனது உறுதியான பற்களுக்குக் காரணம் என்பது அம்மாவின் அசைக்க முடியாத நம்பிக்கை. சிட்னியில் என்னுடன் அவர் இருபத்தைந்து வருடங்கள் சுகதேகியாக வாழ்ந்து, 92 வயதில் காலமாகும்வரை அவரது முப்பத்துரண்டு பற்களும் விழாமல் அப்படியே இருந்தன.

வீட்டில் முருங்கைக்காய் சமாசாரம் பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம் கைதடி முருங்கைக் காய்தான் திறமென அம்மா அடம் பிடிப்பார். கைதடி, ஒரு கலட்டிப் பாங்கான பூமி. அங்கு எது வளருதோ இல்லையோ, முருங்கை மரங்கள் நன்கு வளர்ந்தன. எங்கள் கைதடி வளவிலும் அம்மா பலவகை முருங்கை மரங்களை நட்டிருந்தார். களிமுருங்கை, வலியன் முருங்கை, கட்டை முருங்கை, உலாந்தா முருங்கை என அம்மாவின் பாஷையில் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்கள்.

உலாந்தா முருங்கைக்காய் மிக நீளமானது. இலங்கையின் ஏனைய பகுதிகளிலே “யாழ்ப்பாண முருங்கை“ என்று அழைக்கப்படும் இது, யாழ்குடா நாட்டில் மட்டுமே “உலாந்தா முருங்கை“ என்று அழைக்கப்படுகின்றது. “உலாந்தா முருங்கை“ என்ற பெயர் வந்த வர்த்தமானத்தை என்னுடைய பாட்டி சொல்லித் தெரிந்து கொண்டேன்.


> முருங்கை மரத்தை Ben Tree என்றும் அழைப்பதுண்டு. முருக்கங் கொட்டையிலிருந்து Ben Oil என்ற விலையுயர்ந்த எண்ணை தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணையின் சிறப்பியல்பு, நீண்டகாலத்துக்கு காயாமல் இருப்பதுதான். எனவே மணிக்கூட்டுத் தயாரிப்பிலும் வாசனைத் திரவிய தயாரிப்பிலும் பெரிதும் பயன்படுத்தப்படும்.

‘Surveyor’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு “நில அளவையாளர்“ என்பது தமிழாக வழங்கும் பொழுது, யாழ்ப்பாணத்தில் மட்டும் “உலாந்தா“ என்று அழைக்கப்படுவதும் உண்டு.

ஆங்கிலேயருக்கு முன், ஒல்லாந்தர் இலங்கையை ஆண்டார்கள். இந்த “உலாநதர்களே“ முதன்முதலில் இலங்கையில், முறைப்படி நிலஅளவை செய்தார்கள். அதைச் செய்தவனை யாழ்ப்பாணத்தில் “உலாந்தா“ என்று அழைத்தார்கள்.

இந்த “உலாந்தர்“ இந்தோனேசியத் தீவுகளையும் ஆட்சி செய்தார்கள். அவர்கள் அங்கே கண்ட நல்ல முருங்கை வகையை யாழ்ப்பாண விவசாயிக்கு அறிமுகப் படுத்தினார்களாம். இந்த வரலாற்றினை, முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் நினைவில் வைத்திருக்கும் வகையில், உலாந்தா முருங்கை என்று பெயர் வைக்கப்பட்டதாம்.

சும்மா சொல்லப்படாது! எங்கள் வளவின் தென்மேற்கு மூலையிலுள்ள களிமுருங்கை, பருவ காலத்தில் இலை தெரியாமல் காய்க்கும். நான் ஊரில் வாழ்ந்த காலத்தில், எங்கள் வளவின் களிமுருங்கைக் காய்க் கறியும், மறவன்புலவு வயலில் விளைந்த மொட்டைக் கறுப்பன் நெல் அரிசிப்புட்டும் எனது விருப்பமான உணவு.





சின்ன வயதிலும் ஒரு நீத்துப் பெட்டி புட்டு தனியாளாய்ச் சாப்பிடுவன் என்று சாட்சி சொல்ல, என்னுடைய அக்கா பிறிஸ்பே னில் இருக்கிறார்.

அம்மா முருங்கைக்காய்க் கறி சமைப பது ஒரு பிரத்தியேகக் கலை!

துருவிய தேங்காயைப் பிழிந்து வரும் முதல் பாலில் அவியவிட்டு, தூள்போட்டு, கறி வறட்டல் பருவத்துக்கு வந்தவுடன், சொட்டு நல்லெண்ணை ஊற் றிப் பிரட்டி, பெருஞ்சீரகத் தூ ள்தூவி இறக்குவார். வாசனை ஒரு கட்டை தூரத்துக்கு அப்பா லும் காந்தமாய் இழுக்கும்.

விரதத்துக்கு அம்மா முருங் கைகாய் சமைக்க மாட்டார். தான் அனுஷ்டிக்கும் விர தங்களை நியாயப்படுத்த அம்மா ஒவ்வொரு புராணக் கதை வைத்திருப்பதுபோல, முருங்கைக் காய்க்கும் ஒன்று வைத்திருந்தார்.

சீதை தான் கற்புள்ளவள் என்பதை நிரூபிக்க தீயில் குதித்தாளாம்.

தடுக்க முயன்ற இராம னுக்கு கையில் அகப்பட்டது சீதையின் கூந்தல். இராமன் எறிந்த, அறுந்த கூந்தல் மரத் தில் தொங்கி முருங்கைக் காய்கள் ஆயினவாம். எனவே "விரதச் சமயலுக்கு முருங்கைகாய் ஆகாது" என் பது அம்மா வின் ஆசாரம்.

இராமன் வட இந்தியாவில் பிறந்தாலும் அவன் இமயமலைப் பிரதேசத்தில் பிறந் ததாகவோ வாழ்ந்ததாகவோ தகவல் இல்லை. ஆனால் முருங்கையின் ஆதி மூலம் (Origin) இமயமலை அடிவாரம் என உசாத்துணை நூல்கள் சொல்லு கின்றன. இருப்பினும், இலங்கை இந் தியா தவிர்ந்த, இமய மலையைச் சூழ வுள்ள மற்றைய நாடுகளில் முருங்கைக் காய் உணவுப் பாவனை குறைவு.

இந்தியாவிலும் தென் இந்தியாவிலேயே அதிகளவில் அது சாப்பிடப்படுகிறது. இருப் பினும், இலங்கையைப் போல வகை வகையான முருங்கைச் சமையல், இந் தியாவில் இல்லை என்பது எனது அபிப் பிராயம். ஒன்று அல்லது ஒன்றரை அங் குல நீளமளவில் முருங்கைகாயை நறுக்கி சாம்பாருக்குள் போடுவதுடன் தென் இந்தியாவில் முருங்கைச் சமையல் பெரும் பாலும் நிறைவடைந்துவிடும்.

முருங்கைக் காயை மூன்று அல்லது நான்கு அங்குல நீளத்தில் வெட்டி தனித்தோ, இறால் போட்டுச் சுண்டவைக்கும் வறட்டல் கறியோ, கருவாடு சேர்த்த குழம்போ, தூ ளே மணக்காத வெள்ளைக் கறியோ, சரக்கு அரைத்து வைக்கும் பத்தியக் கறியோ அல்லது முருங்கை இலை போட்ட தேங்காய்பால் சொதியோ இலங்கையில் மட்டுமே நான் சுவைத்த கறி வகைள்.

முருங்கையிலே ஈழத்தமிழரின் குஷினி எத்தனை வகையான சுவைக ளைக் கண்டு பிடித்தன என்பதைச் சொல் லத் தனி அகராதியே தொகுக்க வேண்டும்.



பி.கே.எம்.1, பி.கே.எம்.2, கே.எம்.1 போன்ற பல புதிய முருங்கை இனங்கள் கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக் கழகத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள் ளன. விஞ்ஞான ரீதியாக விருத்தி செய்யப் பட்ட இப் புதிய இனங்கள், உலாந்தா முருங்கை போன்று நீளமானதும், களி முருங்கை போன்று சதைப் பிடிப்பானது மானதும். இவை எல்லாவித மண்ணிலும் வளரும்.

மரமாக முருங்கை வளர்த்ததினால் தான், வேதாளம் மீண்டும்மீண்டும் முருங்கை மரம் ஏறியதாம். அவை எல் லாம் பழங்கதைகள். புதிய விவசாய முறையில், முருங்கையை மரமாக அல் லாது, செடிபோல வளர்க்க வேண்டும்.

பல இடங்களில் பசுமைக் கூடங்களில் சொட்டு நீர்ப்பாசன முறை மூலம் (Drip irrigation) முருங்கை இப்பொழுது சாகுபடி செயயப்படுகிறது. இந்த முறையில் 2.5 ஓ 2.5 மீட்டர் இடை வெளியில் கொட்டைக் கன்றுகளை நட்டு, ஒரு மீட்டர் வளர்ந்த தும் நுனியைக் கிள்ளிவிட வேண்டும். இதனால் பக்கக் கிளைகள் வளர்ந்து பெரு மளவில் காய்க்கும்.

காய்களைப் பறித்த பின், மீண்டும் ஒரு மீட்டர் உயரத்துக்கு கவ்வாத்துப் பண்ணி வளர்த்தால் வருடத்தில் இரண்டு முறை காய்க்கும். பசுமைக் கூடத்தில், மரத்துக்கு மரம், கவ்வாத்துப் பண்ணும் "மாதங்களை" மாற்றுவதன் மூலம், வரு டம் முழுவதும் முருங்கைக் காய் பெற லாம். இந்த வகையில் வெட்டுத் துண்டங் கள் நடப்படுவதில்லை. வெட்டுத் துண்டங் களில் (Cuttings) சல்லி வேர்களே வளரும்.

கொட்டைக் கண்டுபோல ஆணிவேர் கள் வளராதென்பதே இதற்குக் காரணம்.

முருங்கை மரத்தை Ben Tree என்றும் அழைப்பதுண்டு. முருக்கங் கொட்டையிலிருந்து டீநுெ முடை என்ற விலையுயர்ந்த எண்ணை தயாரிக்கப் படுகிறது. இந்த எண்ணை யின் சிறப்பியல்பு, நீண்ட காலத்துக்கு காயாமல் இருப்பதுதான். எனவே மணிக்கூட் டுத் தயாரிப்பிலும் வாசனைத் திரவிய தயாரிப்பிலும் பெரி தும் பயன்படுத்தப்படும்.

சுவிஸ் மணிக்கூடு தயாரிப் பில் இந்த எண்ணையே பயன் படுத்தப்படுகிறது!

நிறைவாக, அந்தக் காலத்து பாக்கியராஜாவின் 'முந்தானை முடிச்சு' படத்தில் வந்த முருங் கைக் காய் மகத்துவத்தையும் இங்கு சொல்லத்தான்வேண் டும். இதிலேதும் விஷயமி ருக்கா என நான் உசாத்துணை நூல்களி லும் கட்டுரைகளிலும் முங்கி எழுந்தும் எனக்கு எந்தவித ஆதா ரமும் கிடைக்கவில்லை. இது 'சிட்டுக் குருவி லேகிய' கட்டுக் கதை போன்றது என்கி றான், என் பல்கலைக்கழக சகா. ஆனாலும் என்ன? தேவைப்படுவோர் சாப்பிட்டுப் பார்க்கலாம், வாச்சால் வாய்க் கட்டும் என் பதே எனது அறிவுரை.

எது எப்படி இருந்தாலும், முருங்கைக் காய்க்கு "மவுசு" சேர்த்த திரைப்பட இயக்குனர் பாக்கியராஜாவை, நாங் கள் இதற்காகப் பாராட்டத்தான் வேண் டும். *



**யதுகுலா ரஜிதன்**
**(ஆராய்ச்சி உதவியாளர்),**
**பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**கிளிநொச்சி.**

# உணவுக்காடு ஒன்று அமைத்திடுவோம்





இயற்கையுடன் இசைந்து பூமியின் மீது அக்கறை கொண்டு உலகளாவிய ரீதியில் உணவுக் காடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. திருக்குறளில் "மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அணி நிழல் காடு என்பதன் பொருள் அடுக்கடுக்காக அமைந்த விதானங்களைக் கொண்ட காடு. இப்படி உள்ள ஒரு காட்டினுள் வெய்யில் மற்றும் மழை மண்ணை தொடாது, மண் அரிப்பு இல்லை. இதனால் அப்பிரதேசத்தில் படிக தூய்மையான நீர் கிடைக்கும்.

உணவு காடுகள் வெவ்வேறு உயரமுடைய மற்றும் மாறுபடும் தன்மை வாய்ந்த பயிர்களை அடுக்காக வளர்ப்பது ஆகும். இது பற்றிய குறிப்பு 1500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சீவகசிந்தாமணியில் உள்ளது. ஏமாங்கத நாட்டின் வளம் பற்றி கூறும் போது,

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்
கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி
வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள்
சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போய
துண்டே"

எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் ஓங்கி வளர்ந்த தென்னையின் நெற்றுக்கள் முற்றிவிழுந்தன. விழுகையில் அடியிலுள்ள வருக்கைப் பலா, ஆசினிப் பலா, மா, வாழை ஆகியவற்றின் இனிய கனிகளைக் கூடவே சாய்த்தன. அவ்வாறு சாய்ந்த கனிகளெல்லாம் சரிந்து தேன் கலந்து ஆற்று நீரில் சென்று சேர்ந்தன. அதனால், அவ்வாற்று நீர் தோய்ந்த இடங்களெல்லாம் அதன் இனிமை தோய்ந்து விளங்கின. விவசாயத் தொழில்நுட்பத்தில் இந்த முதிர்ச்சியை தமிழர்கள் 1500 ஆண்டுகளுக்கு முன்பே பெற்றனர் என்பதை தான் இந்த செய்யுள் விளக்குகிறது. இந்த பாடலில் உயரமான தளத்தில் தென்னையும், அதற்கடுத்த தளங்களில் பாக்கு, பலா, மா, வாழை என அடுத்தடுத்த பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதற்கு நடுவே தேனி வளர்ப்பும் (Apiculture) உள்ளது. இதில் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியது பலாவுக்கும், மாங்கனிக்கும் மகரந்த சேர்க்கை நடைபெற தேனிக்கள் இன்றியமையாதது. எங்களுடைய வரலாறு நெடுகிலும் இயற்கையுடன் இசைந்து வாழ்ந்தமைக்கான சான்றுகள் இவை. பசுமை புரட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து இம்முறைகள் வழக்கத்தில் இருந்து அகற்றப்பட்டன.

இன்றைய காலத்தில் இரண்டு மில்





லியனுக்கு மேற்பட்ட மக்கள் உணவுப் பாது காப்பின்மையை அனுபவிக்கின்றனர். அண்ணளவாக 700 மில்லியன் மக்கள் குறைந்த அளவு போசணையைப் பெற்றுக் கொள்கின்றனர். அதே நேரம் உலகளா வியரீதியில் உணவை அதிகளவில் நுகர்தல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வயது வந்தோரில் 39 சதவீதத்தினர் அதிகமான நிறையினால் அல்லது உடற்பருமன் (obesity) பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளனர். உலகளாவிய ரீதியில் உணவு உற்பத்தி முறையானது ஆரோக் கியமான உணவுகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட உணவுகளை உற்பத்தி செய்வதில்லை. 15 பயிர்கள் மாத்திரமே மனித குலத்துக்குத் தேவையான 90 சத வீதமான ஆற்றலை வழங்குகின்றன. ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் அனை வருக்கும் போதுமான அளவு உணவு களை வழங்கப் போதுமான அளவில் உற்பத்தி செய்யப்படவில்லை.

(அடுத்த வாரம் தொடரும்...)








AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்


# புதிய வரிக்கொள்கைகளை ஏற்கமறுக்கும் மக்கள்!

தற்போது இலங்கை பாரிய கடன் சுமையைத் தாங்கி மீள முடியாத ஒரு நிலையில் இருப்பதனாலும் நாட்டில் போதிய வருமானம் இல்லாத காரணத்தினாலும், அரசாங்கம் வேறு மார்க்கமின்றி சடுதியாக "இறுக்கமான வரிக்கொள்கை" முறைமையினை அமுல்படுத்தியுள்ளது. அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கின்ற பெரும் துறைகளான தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் இதர ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டிலிருந்து தொழில் செய்பவர்கள் இலங்கைக்கு அனுப்பக்கூடிய வெளிநாட்டு அந்நியச் செலாவணி வருமானம், சுற்றுலாத்துறை, உள்நாட்டு உற்பத்தி போன்ற அனைத்துமே கடந்த சில வருடங்களாக பாரிய அளவில் பாதிப்படைந்துள்ளன. அரசாங்கத்திற்கு என்றுமே இல்லாத வகையில் அந்நியச் செலாவணி கையிருப்பு பாரிய அளவில் குறைவடைந்து இன்று இலங்கை நாடானது வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது. அதாவது நாட்டு மக்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொள்ள தேவையான அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாது ஒரு இருள் யுகத்தை இலங்கை அடைந்துள்ளது.

அனைத்துலக நாணய நிதியம் (IMF) மற்றும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் அணுகியபோதிலும் அந்த கோரிக்கைகள் பெரிதாக கவனம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நேச நாடுகள் இலங்கைக்கு பல்வகை அவசர உதவிகளினை செய்திருந்தாலும் இலங்கையின் தேவையோ பன்மடங்காக இருக்கின்றது. அனைத்துலக நாணய நிதியத்திடம் (IMF) இலங்கை கடன் பெறுவதுதான் நீண்ட காலத்திற்கு நன்மை விளைவிக்குமென பொருளியல் வல்லுனர்களும் நிபுணர்களும் கருதுகின்றனர். இதனால் அரசாங்கம் அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து (IMF) தேவையான கடனை பெற்றுக் கொள்ள சிறந்த அணுகுமுறையை முன் வைத்தது. இலங்கை கடந்த காலங்களில் 17 தடவைக்கு மேலதிகமாக இந்த உதவியை பெற்றிருந்தாலும் இம்முறை பல நிபந்தனைகளை வைத்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த நிபந்தனைகளை ஏற்று கரிசனையுடன் திட்டமிட்டு செயல்படுத்த ஆரம்பித்ததின் ஓர் அம்சமாகத்தான் இந்த வரி அதிகரிப்பினை காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தினால் மக்களை சிறந்த முறையில் வழிநடாத்தி ஒளிமயமான நிகழ்கால வாழ்க்கையையும், அதேநேரத்தில் தரம் வாய்ந்த எதிர்காலத்தையும் உருவாக்கும் நோக்கோடு செல்வந்தர்கள் மற்றும் அதிக வருமானம் பெறுபவர்களிடம் ஒழுங்கு முறைப்படி பணத்தினை அறவிட்டு, சாதாரண மக்களுக்கு அந்த பணத்தின் மூலம் சிறந்த ஒரு சேவையை செய்ய ஒரு பொறிமுறையே வரி அறவீடாக இருந்து வந்தது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிறந்த கொள்கைகள் வாயிலாக மக்களிடமிருந்து மிக நுட்பமாக வரியினை அறவிட்டுவருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். அந்த நாடுகளில் சிறந்த தேசிய கொள்கை இருப்பதன் வாயிலாக ஆட்சிக்கு வருகின்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் பாரிய முறையில் கொள்கைகளை மாற்றி அமைக்க முடியாத தன்மையை இருப்பதனால், தொடர் தேர்ச்சியாக காலத்திற்கேற்ப சிறந்த பொறிமுறையின் வாயிலாக, தமக்கு தேவையான போதிய வரி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் தேசியக் கொள்கை இல்லாத காரணத்தினால் காலத்திற்குக் காலம் இலங்கையின் கொள்கைகளில் பாரியளவு மாற்றங்களை ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தமக்கேற்ற விதத்தில் மாற்றி அமைக்கப்பழகிவிட்டனர். நிலையான தேசியக் கொள்கை இல்லாத காரணத்தினால் அரசாங்கத்தினால் இலங்கையில் நிலையான ஒரு வரி கொள்கையை அமைக்க முடியாதது மிகவும் ஒரு துர்பாக்கிய நிலையாகவே நான் கருதுகின்றேன். இதன் விளைவை இலங்கையில் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியினை ஈட்ட முடியாத தன்மையை காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது ஒரு அரசாங்கம் நாட்டின் நலன் கருதி சிறந்த கொள்கைகளை கொண்டுவந்து அதனை அமுல்படுத்தும் தறுவாயில், அடுத்துவரும் அரசாங்கமானது மக்களுக்குப் பல வரிச் சலுகைகளை தருவதாகக் கூறி, நடைமுறை சாத்தியமற்ற பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சியை கைப்பற்றுகின்றனர். இதன் வாயிலாக அரசாங்கத்தினை கொண்டு நடத்தத் தேவையான போதிய வருமானத்தினை ஈட்டிக் கொள்ள முடியாத தன்மை ஏற்பட்டு வருகின்றது. எனவே நாட்டு மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்க வேண்டிய அத்தியாவசிய சேவைகள் மற்றும் கடமைகளை செய்ய முடியாத நிலைமைக்கு இலங்கை படிப்படியாக தள்ளப்பட்டு வருவதனை காணக்கூடியதாக இருந்தது. இதனால் அரசின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் மொத்த தேசிய வருமானமானது அரச செலவினத்திற்கு போதியதாக அமையாது காணப்பட்டு வருவதை பல தசாப்தங்களாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் வரவு செலவு பற்றாக்குறை நிலவிவருவதை மத்திய வங்கி அறிக்கை காட்டுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் வேறுவழியின்றி பாரியளவில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிடமும் கடன்களை பெற வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டு வந்தமையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து நிற்கின்றோம்.

அரசாங்கத்தைப் பொறுத்தளவில், தற்போதைய வரி அதிகரிப்பின் வாயிலாகவே ஈட்டவேண்டிய வருமான இலக்கை (Revenue Target) அடையமுடியும் என்ற நிலைக்கு அது வந்துள்ளது. இதன் காரணமாக மக்களிடமிருந்து சகல வழிகளிலும் பலவிதமான வரியினை அறவிட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளும், அதன் பின் வந்த அறிக்கைகளும் காரணமாகவுள்ளன.

ஏற்கனவே பாரிய பொருளாதார சிக்கல்களால் போதிய வியாபாரம் இன்மை, என்றும் இல்லா வேலையில்லா பிரச்சினை, நாளாந்த வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரிப்பு, இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி, வங்கிக் கடனுக்கான வட்டிவிகித அதிகரிப்பு, வரலாறு காணாத எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, கல்விகற்ற வல்லுனர்கள் நிரந்தரமாக நாட்டை விட்டு செல்கின்றமை, போன்ற பல காரணங்களினால் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட புதிய வரி மாற்றங்களினை ஏற்றுக்கொள்ள முடியாது மக்கள் திணறுவதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்கள் தமது வருமானத்திற்கு ஏற்ற வகையில் வாழ்க்கை முறைமையை அமைத்து அதன் வழி தமது அன்றாட வாழ்க்கையினை கொண்டு நடத்துகின்ற சமயத்தில், இந்த பாரிய வரிச்சுமையானது அவர்களுடைய கையில் கிடைக்கின்ற பணத்தின் அளவை குறைக்கின்றது. இதன் காரணமாக மக்கள் தங்களுடைய அத்தியாவசிய செலவைக்கூட செய்ய முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் மனஉளைச்சல், உடல் ஆரோக்கிய குறைபாடு, குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமை, ஆரோக்கிய உணவு பெற்றுக் கொள்ள முடியாமை, தேவையான கல்வியைப் பெறமுடியாமை, அத்தியாவசிய மருந்து செலவைக் கூட சமாளிக்க முடியாத நிலை போன்றவற்றை மக்கள் எதிர்நோக்குகின்றனர். இது ஒரு "இரண்டுங்கெட்டான் நிலை" என்றே கூற வேண்டும். அதாவது அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்ற ஒரே மார்க்கமாக வரி அதிகரிப்பும், அதே நேரம் மக்கள் அந்த வரியினை செலுத்த முடியாத நிலையிலிருப்பதும் பாரிய பிரச்சினைகளாக இன்று இலங்கை மக்கள் முகம் கொடுக்க வைத்துள்ளது.

மக்களின் கருத்து என்னவென்றால், ஆட்சியை ஏற்கின்ற அரசாங்கத்தின் தவறு காரணமாக நாடு இந்த அதலபாதாள நிலையை அடைந்துள்ளது அத்துடன் பாரிய ஊழல், லஞ்சம், சட்டம் பின்பற்றப்படாமை, தகுந்த திட்டமிடல் இன்மையால் தேவையற்ற அபிவிருத்தி செலவினங்களை செய்தமை, இலகு வட்டியில் கடனை பெறாது அதிக வட்டியை தாங்கும் கடனை சீனாவிடம் பெற்றமை, மேற்கண்ட பாரிய பொருளாதாரத் திட்டங்கள் உண்மையான செலவுத் தொகைக்கு அதிகமாக போலி கணக்குகளை தயாரித்து அதன் வாயிலாக பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக்கியமை போன்ற காரணங்களை மக்கள் முன்வைக்கின்றனர். இதன் ஒரு கோரிக்கையாக தற்பொழுது நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினையானது கடந்தகால ஆட்சியினரின் தவறு காரணமாக ஏற்பட்டுள்ளதாகவும், காலதாமதமின்றி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வீண் விரயமாக செலவழித்த பணத்தினையும் உண்மையான செலவுக்கு அதிகமாக எடுக்கப்பட்ட பணத்தினையும் மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரச்செய்ய வேண்டுமென்று விடாப்பிடியாக மக்கள் இருக்கின்றனர். இதன்காரணமாகத்தான் அரசாங்கத்தினால் தற்பொழுது முன்வைக்கப்பட்ட வரி அதிகரிப்புத்திட்டத்தினை மக்கள் எதிர்க்கின்றனர்.

எது எவ்வாறாயினும் நாம் ஜனநாயக நாட்டில் இருப்பதனால், ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் முன்வைக்கின்ற வரி உள்ளடங்களாக அனைத்து சட்டதிட்டங்களையும் மக்கள் கட்டாயமாக பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது. எனவே சட்டத்தை தெரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பது அனைவருடைய கடமையாகும். அந்த வகையில் தனி நபருக்கான வரி சம்பந்தமான மாற்றங்களை பின்வருமாறு நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு வருடத்திற்கான வரி நிவாரண அளவு ரூபா. 3,000,000/= இலிருந்து ரூபா. 1,200,000/= ஆக குறைக்கப்பட்டுள்ளது. (Personal Reliefs reduced from Rs. 3Mn to Rs. 1.2Mn per annum)

6%, 12%, 18% ஆக இருந்த வரி விகிதங்கள் தற்பொழுது 6%, 12%, 18%, 24%,30%,36% என பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

செலவின நிவாரணம் (Expenditure Relief) அதாவது மேலும் அதிகமாக மாதம் ஒரு லட்சம் அல்லது வருடம் 12 லட்சத்துக்கு செய்கின்ற ஐந்து வகையான செலவினங்களுக்கான வரிச்சலுகை அகற்றப்பட்டுள்ளது.

தனிநபர் (Proprietorship) மற்றும் பங்குடமை (Partnership) வாயிலாக செய்கின்ற வியாபார வருமானத்திற்கு அறவிடப்பட்டு வந்த 14% மற்றும் 28% வருமானவரியானது 30% விகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வியாபார வருமானத்திற்கான வரிவிலக்களிப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது (Removal of Tax Exemptions). உதாரணமாக இரத்தினக்கல் ஏற்றுமதி ( Gem Export), மென்பொருள் துறை (Software Industry), விவசாயம் (Agriculture), மீன்பிடி (Fishery) போன்றன.

இதன் காரணமாக தற்பொழுது பாரிய சமூக பிரச்சினை தலைதூக்கி உள்ளது. ஒரு பக்கத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து காணப்படுகின்றது, அதேநேரம் அந்த அதிகரித்த செலவினங்களை ஈடு செய்யக்கூடிய வருமானம் இன்மை, அவ்வாறு வருமானம் பெற்றாலும் அதற்கு பாரிய வரியை செலுத்துகின்றோம் என்ற மனக்கவலையும் மக்களை வாட்டி வருகின்றது.

தற்பொழுது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் சிலவற்றை நாம் பார்ப்போம்.

கல்வி கற்ற ஒரு வர்க்கத்தினர் நாட்டை விட்டு நிரந்தரமாக செல்கின்றமை.

அண்மைய காலங்களில் வைத்தியர்கள் உட்பட ஏனைய தொழில்சார் வல்லுநர்கள் அரசாங்கத்தின் வரி விதிப்பால் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல் உருவாகும்.

மக்களின் சேமிப்பு பாரிய அளவில் குறைந்து போகின்றமை.

வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத நிலைமை.

நலிந்த எதிர்கால சமூகம் உருவாகப்போகின்றது.

லஞ்சம் மற்றும் ஊழல் போன்ற ஏனைய பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு.

எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரப்போகின்ற அரசாங்கம், தற்போது அமுலிலுள்ள வரிக்கொள்கையினை "நீக்குவது அல்லது பாரிய அளவில் சலுகைகள் வழங்குவது", போன்ற பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு முன்வைத்து நாட்டினை மேலும் சிக்கலுக்குள் தள்ளக்கூடிய தன்மை.

நீண்ட கால திட்டங்களை இலங்கை அடைய முடியாத சாத்தியக்கூறுகள்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து பல பிரச்சனைகளை சந்தித்திருந்தாலும் தற்சமயம் மக்கள் அனைவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினையானது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நான் கருதுகின்றேன். குறிப்பாக இளம் சமுதாயத்தினர், முறையான மாற்றம், நேர்த்தியான கட்டமைப்பு மாற்றம் (System Change) தேவையென தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். சிங்கப்பூர், ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் சிறந்த ஒரு முறைமையை (System) இலங்கையிலும் கட்டாயமாக அமுல்படுத்த வேண்டும் என மக்கள் பிடிவாதமாக கேட்கின்றனர்.

ஆகவே, அரசாங்கம் மக்களின் இந்தப் பிரச்சினையை செவிமடுத்து அதனை உள்வாங்கி, அதற்கேற்ப மாற்றங்களை செய்து, சிறந்தவொரு பொறிமுறையில் வரியினை அறவிடுவதன் மூலம் நாட்டினையும் மற்றும் நாட்டு மக்களையும் மீண்டும் ஒரு சிறந்த நிலைக்குக் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். *




# குளத்தின் அலை[ழ]கரை

“ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” இது ஔவையார் சொன்னது. பண்டையத்தமிழில் ஓர் ஆற்றின் சிறப்பு அந்த நாட்டின் வளமாகக் கொண்டு அதை முதலில் காப்பியச் சிறப்பாக பாடி வைத்துள்ளனர்.

இலங்கை மணித்திரு நாட்டைப் பாடியவர்களும் மாணிக்க கங்கையை வேண்டுமென்ற அளவுக்கு சிறப்பித்துள்ளனர். அதிலும் ஒரு புலவர், “வேணிச்சங்கரர் தொண்டர்கள் என்று

**வீடுதோறும் சென்றிரப்பவர்க்கெல்லாம்.**
**மாணிக்கமள்ளிப் பிச்சை கொடுத்திடும்**
**மாவலிகங்கை நாடெங்கள் நாடே”**

என்று பாடினார். இந்த நதிகளெல்லாம் பாயாத மத்திய மாகாணத்தின் கீழே மிகச்சில சிற்றாறுகள் ஓடினாலும் அவற்றின் பகுதிகளாக அவை சில இடங்களில் குளங்களாகத் தேக்கப்பட்டுள்ளன.

குளங்கள் பள்ளங்களில் உருவாக்கப்படுவதில்லை என்பது முதல் இரகசியம். பள்ளங்களின் மேல் உருவாகின்றன. குளத்தின் கீழ் பகுதியே பள்ளமாகச் செல்லும். அதுவே நஞ்சை எனப்படும். முன்னர் சொன்னேனே. நஞ்சை பிஞ்சை எனப் பேசப்படும் நன்செய் நிலம் பின்செய் நிலம் என்பவற்றின் கருத்து நீர் பாய்ந்து விளையும் நெடுவயல்கள்,நன்செய். பின்வரும் மழையை நம்பி பயிரிடுபவை பின்செய் நிலம். அவ்வளவுதான்.

> “குளங்கள் பள்ளங்களில் உருவாக்கப் படுவதில்லை என்பது முதல் இரகசியம். பள்ளங்களின் மேல் உருவாகின்றன. குளத்தின் கீழ் பகுதியே பள்ளமாகச் செல்லும். அதுவே நஞ்சை எனப்படும்.”

ஒரு மரத்துக்கு பக்கங்கள் அனைத்திலும் வேரோடி அதை நிற்க வைத்திருப்பது போல ஒரு மலையையும் பக்க வேர்களாகப் பாறைகள் ஓடி நிலையாக வைத்துள்ளன. என்பதை அறிவோம் அப்படி பக்கச் சாரிப்பு இல்லை. மலையும் புரளும்.

இந்த மலைகளின் பக்க வேர்களை அண்டியதாகவே குளங்களை அமைத்துள்ளார்கள். பள்ளத்தை நிரப்பி மழைக் காலத்தில் குளங்கள் நிரம்பி வழிவதை வான்பாய்தல் என்பர். இந்த வான்பாயும் கரை அதாவது குளத்தின் மிகைநீர் வழியும் கரை எங்கும் இந்த மலை வேர்களான பாறைப்பகுதியாகவே இருக்கும். அவை எத்தனை ஆண்டுகள் நீர் பாய்ந்தாலும் மண் அரித்துப் போகாது குளம் அப்படியே இருக்கும். இந்த விதிமுறைகளை மீறி குளங்கள் உருவாக்கப்படுவதில்லை.

சிறு குளங்களின் கொள்ளவுக்கேற்ப அதன் நீர் பாய்ந்து விளையக்கூடிய நிலத்தின் அளவு நிர்ணயிக்கப்பட்டு, அந்த நிலம் அத்தனை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒரு குளத்தின் அளவுக்கேற்ப ஒருவருக்கு நாலேக்கர் வீதம் இருபத்தைந்து பேர், ஒருவருக்கு ஒன்றரை ஏக்கர் வீம் பதினாறு பேர் ஓருவருக்கு இரண்டேக்கர் விதம் இருபது பேர் எனபது போல குளங்களும் அதன் கீழுள்ள வயல் நிலங்களும் பகிரப்பட்டிருக்கும். நிலம் காடாகவே வழங்கப்பட்டு அதை விவசாயிகளே வெட்டி துப்பரவு செய்து வயலாக்க வேண்டும். நீர்ப்பாசன வாய்க்கால்கள் தடைகள் கொட்டுகள் என்பன அரசால் செய்து கொடுக்கப்படும்.

எந்தெந்த விவசாயிகளுக்கு காணிகள் உள்ளதோ அந்தந்த விவசாயிகளுகளுக்கே அந்தக்குளம் சொந்தமாக கருதப்படும்.

நீர்ப்பாசன குள நலன்களை கவனிக்க விவசாயிகளின் கூட்டு முயற்சியும் அதை தலைமையேற்று நடாத்த அவர்களில் ஒருவர் கமவிதானையாகவும் அவர்களால் தெரிவாகி இருப்பார். குளம் நிரம்பிப் பாயும் காலம் முதல் குளம் வற்றி காயும் காலம் வரை விவசாயிகளுக்கே மீன்பிடிக்கும் உரிமை இருக்கும் என்றால், தமது சொந்த

தேவைக்காக தூண்டில் போட்டு மீன்பிடிப்பதையும் சேலைவாரி சிறுமீன்களை பிடிப்பதையும் தடுப்பதில்லை. என்றாலும் குளத்தின் உட்புறத்தில் மண்வெட்டுவதையோ, குளத்தின் அலைகரைகளில் மண்வெட்டிகொண்டோ வேறெந்த முறையிலோ மண்வெட்ட அனுமதியில்லை.

தூண்டில் போடுபவர்கள் அதற்கான புழுவை வீட்டிலிருந்து கொண்டுவர வேண்டும். அல்லது குளத்தின் பின்புறத்தில் வெட்டலாம். குளத்தின் உள்ளே மண்ணை புரட்டினால் அந்த மண் மழை வரும் போது கரைந்து குளத்துக்குள் ஓடி குளத்தின் கொள்ளளவு குறைந்து விடும் என்பதுதான் காரணம்.

குளம் முற்றாக வற்றும்போது குளத்தின் அடிப் பொருக்கைச் சட்டி பானை செய்வதற்காக அவர்கள் எடுத்துச் செல்வர். ஆண்டு முழுதுக்கமான களிமண் அப்போதே சேர்ப்பார்கள். மீதி பொருக்குகளை அள்ளி தமது நிலங்களுக்கு பசளையாக போடுவார்கள். இது குளத்தை தூர் வாருவதாக அமையும். அதை யாராவது தேவைப்பட்ட கிராமவாசிகள் செய்யலாம்.

குளங்களே நீராடும் இடமாகவும், சலவை செய்யும் இடமாகவும் இருக்கும். குளிக்கும் துறைகளையும் குளக்கட்டையும் பற்றை நீக்கி சுத்தமாக வைத்திருப்பார்கள். அது விவசாயிகளின் கடமை.

குளக்கட்டில் முகப்பில் பிள்ளையார். மேலே கிறிஸ்தவர்களுக்கு ஒரு குருசுமரம். அடுத்து வைரவர் காத்தான் அது இதென்று இருக்கும். பெருமரங்களின் கீழெல்லாம் ஏதாவது ஒரு சாமியை வைப்பார்கள். இதனால் அசுத்தம் செய்பவர்களை கட்டுப்படுத்த முடிந்தது. குளக்கட்டுகளில் இலுப்பை, கூமா, கூழா, புளி என்பவையும். நீரோடும் கரையெங்கும் மருதமரமும் நிறைந்திருக்கும்.

**கூழாவடியாம் குளிர்ந்த நிழலாம்**
**குளக்கட்டு நீளம் புளியமினலாம்.**
**யாரடா எந்தன் குளக்கட்டுத்தன்னிலே**
**நாங்கள்தான் அந்த சிந்துகவி பாடுவோர்**

– என்ற நாட்டார்பாடல் நினைவுக்கு வருகிறது.

குளங்களில் நீர்ப்பாசனம், மழைக்கேற்ப இருபோகம், ஒருபோகம் என நெற்செய்கை அமையும். அதன்பின் கிராமத்தின் அந்த நிலத்தை மேய்சற்றரவைகளாகக் கொண்டு வயல் வெளியெங்கும் வண்ணமயமான கால்நடைகள் மேய்வதைக்காணலாம். அவற்றின் சாணம், மூத்திரம் என்பவை வயலில் பசளையாகிக் கொண்டிருக்கும். இந்தக் கால்நடைகளின் குடிநீர் குளமாகும். எனவே, குளத்தின் அலைகரையெங்கும் (குளக்கட்டின் எதிரே குளத்து நீரின் எதிரில் அதன் அலைகள் மோதும்கரை அலைகரை எனப்படும் பெரும்பாலும் இந்த பிரதேசம் உவராக இருப்பதுண்டு காரணம் நீரில் கலக்கும் பொருட்களிலுள்ள உப்புத்தன்மை அலைகளால் வெளியே தள்ளப்படுகிறது) கால்நடைகளின் கழிவுகள் நிறையும். இவைதவிர மழைக்காலங்களில் அள்ளுண்டு வரும் வெள்ளமும் நிரம்ப பசளைகளை நீரில் கலக்கிறது.

விவசாய முயற்சி நடந்து கொண்டிருக்கும்போதே, காட்டில் கரையாக்கன் தடிகளையும், பன்னைத்தடிகளையும் சேர்த்து அவற்றை சீவி சேகரித்து கரப்புக்கட்டும் வேலை நடந்து கொண்டிருக்கும். எல்லா குளப்பங்காளர்களும் கரப்பு வைத்திருப்பார்கள். குளம் வற்றி சிறுசிறு துண்டுகளாக பிரிந்து மோட்டைகளாகும்.

அங்கு குளத்தின் மீன்கள் நிறைந்து துள்ளும் அவ்வப்போது கறித் தேவைகளுக்கு பிடித்தாலும் இனி அவை வாழாது என்ற நிலை வரும் போது பங்காளர்களுக்கு ஒரு நாளை அறிவித்து கரப்புக்குத்த முடிவெடுப்பார்கள். ஒரு விழாவைப்போல பங்காளர்கள் மட்டுமன்றி, கிராமவாசிகளும் அங்கு குழுமுவார்கள். விரால், பனையறி, வாழை, கெழுறு, கொக்கச்சான் சுங்கான், மயறி, என கரப்பிலும், கச்சல், வெள்ளிமடந்தை கெழிறு போன்றவை பின்னாலேயே பெண்களால் சேலையால் வாரியும் பிடிக்கப்படும்.

குழுமி நிற்கும் கிராமத்தவர்கள் மீன்களைச் சேகரிக்க உதவி செய்வர். இறுதியில் அள்ளாக் கொள்ளையாக பிடித்த மீன்களில் கிராம மக்களுக்கும் கணிசமான அளவு பிரித்துக் கொடுத்தபின். மீதமுள்ளவற்றை வீட்டுக்கு கொண்டு சென்று அவற்றை கூடியிருந்து பெண்களும் ஆண்களும் பிள்ளைகளுமாக சுத்தம் செய்து கறியாகவும் பொரியலாகவும், மீதம் வற்றலாகவும் போட்டு பாதுகாக்கப்பட்டு வருடம் முழுவதற்கும் கறிக்குதவும் வண்ணம் அடுக்களையுள் அடுப்புக்கு நேரே பரண்போட்டு, அதிலே ஒரு குட்டிச் சாக்குளில் வைத்து பாதுகாக்கப்படும்.

அடுத்தவருட மழைவெள்ளம் வந்த பின்னும் இந்த கருவாடு இருக்கும். கத்தரிக்காய் முருங்கைக்காய், உருளைக் கிழங்கு என மரக்கறிகளுள் போட்டு சமைத்தால் பிரியாணிவகைகள் இந்த சுவையை பிச்சை வாங்க வேண்டும்.

இன்றைய குளக்கட்டுகள் மந்துகள் மூடிப்போய்க் கிடக்கின்றன. காடையர்கள் இரவில் கூடி மதுவருந்தும் இடமாக அங்கே உடைந்த சாராயப் போத்தல்களும், காலிபியர்ரின்களும் சிதறிக்கிடக்கின்றன. குளங்களில் மக்கள் இப்போது இறங்கி குளிப்பதில்லை. அதனால் குளிக்கும் துறைகளில் பாசி நிறைந்து கிடக்கிறது. மனிதர்கள் குளங்களில் இறங்குவதில்லை. அங்கே முதலைகள் நிறைந்துள்ளன. குளங்களின் அலைகரைகளில் மண் கொட்டி நிரப்பி மக்கள் வீடுகள் கட்டி குடியேறியுள்ளார்கள். அதனால் கால்நடைகள் மேய்வதில்லை. மழை வெள்ளம் குளங்களுக்குள் பாய முடியாமல் வீதிகளை அரித்துப் பாய்ந்து ஊருக்குள் நுழைகிறது.

குளத்தின் மீன்கள் மழை பெய்த போதே ஏலத்தில் விற்கப்படுகின்றன. ஏலத்தில் குளத்தை எடுப்பவர் மீன்களை ஏற்றுமதி செய்கிறார். கிராமவாசிக்கும், குளப்பங்காளருக்கும் அன்றாட உண விற்கும் விலைக்குக்கூட மீன் கிடைப்பதில்லை. மண்கிளற அனுமதிக்காத குளங்களுள் இன்று மண் கொட்டி நிரவி மாளிகை எழுப்புகிறார்கள். எல்லாம் அறிந்தும் நாம் மௌனமாகத்தான் இருக்கிறோம்.

*



# இலாபம் தரும் நாட்டுக் கோழி வளர்ப்பு



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

நாட்டுக்கோழிகளின் பூர்வீகம் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவாகும்.

ஆரியர்களினது வருகையால் இலங்கைக்கு நாட்டுக்கோழி அறிமுகம் செய்யப்பட்டது. ஆதிகாலத்திலிருந்தே சிறியளவில் வீடுகளின் பயன்பாட்டிற்காகக் கோழிகள் வளர்க்கப்பட்டுள்ளன.

நாட்டுக்கோழி வளர்ப்பு பரிணாம வளர்ச்சி அடைந்திருப்பதோடு தொழில் நோக்கம் கருதித் தற்போது எல்லா நாடுகளிலும் சிறியளவிலும் பெரியளவிலும் வீடுகளிலும் பண்ணைகளிலும் அக்கோழி வளர்ப்பு இடம்பெற்றும் வருகின்றது. காரணம் அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்களும் சிறந்த வருமானமும் என்றுதான் கூறவேண்டும்.

முட்டைக்கோழி மற்றும் புராய்லர் கோழிகளைப் போன்றில்லாமல் நாட்டுக் கோழிகளின் வளர்ப்பு முறை மிகவும் எளிமையானது.

கூண்டு முறை வளர்ப்பு, புறக்கடை வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் முறை வளர்ப்பு என தகுந்தாற் போல் நாட்டுக்கோழி வளர்ப்போர் வளர்க்கின்றார்கள்.

நாட்டுக்கோழி ஏன் விரும்பி வளர்க்கப்படுகின்றது?

1. குறைந்த மூலதனத்தில் நிறைந்த இலாபம்
2. சுலபமான தொழில்
3. நாட்டுக்கோழியை வளர்க்கத் தனியான நேரம் ஒதுக்க வேண்டியதில்லை
4. நெரிசலில் நாட்டுக் கோழிகள் வளரும் திறன் கொண்டவை.
5. மேய்ச்சல் முறையிலும் வளர்க்கலாம்.
6. நாட்டுக்கோழிகள் அதிக நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டவை.



**நாட்டுக்கோழி இனங்கள்**

இந்தியாவில் பலவகை நாட்டுக்கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அசில் ரகங்கள், பெருவிடை, சிறுவிடை மற்றும் கடக்நாத். பஞ்சப் ப்ராயிலர். மற்றும் கருங்கோழியினங்களும் காணப்படுகின்றன.

இலங்கையில் பெருமளவாக உள்ளூர் தூய நாட்டுக்கோழியினங்களே வளர்க்கப்படுகின்றன.

அதிலும் விசேடமாக கழுத்து வெட்டி கோழிகள் இலங்கைக்கே உரித்தான இனமாகையால் பரவலாக எல்லாப் பண்ணைகளிலும் காணப்படுகின்றன.

இக்கழுத்தறுத்தான் இனங்களில் சேவல் மற்றும் பேடுகள் சாதாரண நாட்டுக் கோழிகளை விட பருமனில் கூடியவையாக வளர்கின்றன. அத்துடன் அவற்றின் முட்டையும் சாதாரண முட்டையின் எடையை விட அதிகமாகவே காணப்படுவதுடன் முட்டையிடும் விகிதமும் ஒப்பீட்டளவில் கூடுதலாகவே காணப்படுகின்றது.

எனவே பண்ணை வளர்ப்பிற்கு கழுத்தறுத்தான் கோழியினம் உகந்ததாகவும் இலாபகரமானதாகவும் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**முதலீடு**

100 கோழி வளர்ப்பதற்கு, ஒரு நாள் குஞ்சின் விலை 100/= படி 10,000/= தேவைப்படும்.

ஒரு நாள் குஞ்சு பராமரிப்பது கடினம் எனும்பட்சத்தில் இரண்டு வார குஞ்சுகளை வாங்கி வளர்க்கலாம். இது மிகவும் சிறந்த தெரிவாக அமையும். இரண்டு வார குஞ்சின் விலை 150/=.

ஒரு கோழிக்கு 1-2 சதுர அடி இட அமைப்பு தேவை. 10 அடி அகலத்திற்கு கூடாமல் கொட்டகைகளை காற்றோட்டமாகவும் இரண்டு அடி அரைச்சுவர் நாலாபக்கமும் அமைக்க வேண்டும். தகடுகளை கொண்டும் மறைத்தபடி அமைக்கலாம். கொட்டகையின் நீளம் 20 அடிகளைக் கொண்டு அமைத்தால் 100 கோழிகளை வளர்க்கலாம்.

நாட்டுக் கோழிகளுக்கான கூடமைப்பு இவ்வாறுதான் அமைய வேண்டுமென்றில்லை. மேலேயுள்ள தகவலைக் கொண்டு காற்றோட்டமாக வசதிக்கேற்ப அமைக்கலாம்.

பழைய தகடுகள் அறுப்பு மரங்களை வாங்கி இவ்வாறான கொட்டகை அமைக்க குறைந்தது 60,000 ரூபா தேவைப்படும். நீங்கள் அதிகமாக செலவு செய்தாலும் அது நிலையான செலவாகவே இருக்க வேண்டும்.

**கோழி ஆண் பெண் விகிதம்**

ஒரு சேவலுக்கு 4 அல்லது 8 பேடுகள் வரை வளர்க்கலாம். 100 கோழிகள் வளர்க்கும்போது குறைந்தபட்சம் 15 சேவல்கள் இருக்க வேண்டும்.

ஆரோக்கியமான பேடு 4 1/2 மாதங்களில் முட்டையிடத் தொடங்கிவிடும். முட்டை விருத்தி அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் இருக்க வேண்டுமெனில் சேவல்கள் வீரியத்துடன் இருக்க வேண்டும்.

கோழிகள் சரியாக 4 1/2 மாதத்தில் முட்டை இட ஆரம்பித்தால். 100 வீதம் சரியாக, ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டுள்ளது என்று அர்த்தமாகும்.

குஞ்சுகளில் வாங்கும் போது இனம் பிரித்தும் வாங்கலாம். எனவே முட்டை நோக்கத்திற்காக வளர்க்கப்படும்போது சேவல்களின் எண்ணிக்கை விகிதாசாரப் படி இருத்தல் அவசியம்.

முட்டை வீதம் குறைவடையும் பட்சத்தில் சேவல்களை விற்றுவிட்டு புதிய சேவல்களை இணைக்க வேண்டும். காரணம் ஒரு பேடு ஒரே சேவலுடன் இனப்பெருக்கத்தில் குறிப்பிட்ட காலம் வரைதான் ஆர்வம் காட்டும்.

எனவே கோழிகளின் இனப்பெருக்கம் தொடர்பான அனுபவ அறிவும் உங்களுக்கு அவசியமாகும்.



அதோடு முட்டை இடும் வீதம் குறைவடைய சேவல் மட்டும் காரணமல்ல புரதச்சத்து, கல்சிய குறைபாடும் காரணமாகும்.

**கோழிகளுக்கான தீவனம்**

நாட்டுக்கோழிகளைப் பொறுத்த வரை தீவன தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. அத்துடன் அதற்கான செலவும் குறைவு. குறைந்த எண்ணிக்கையில் வீட்டில் வளர்க்கும் போது சமையலறைக் கழிவுகள், காய்கறி கழிவுகள், புல் வகைகளை உணவாக கொடுத்து வளர்க்கலாம்..

பெரியளவில் பண்ணைகளாக வளர்க்கும் போது தீவனத்தின் தேவை அதிகமாகவே ஏற்படும். மேய்ச்சல் முறையில் கோழிகளை வளர்க்கும்போது இரவுப் பொழுதில் உலர் தீவனமாக கழிவுக்கருவாடு கலந்த தவிடு போன்ற உணவை கட்டாயம் வைத்தே கோழிகளை கொட்டகையில் அடைக்க வேண்டும்.

இல்லாது போனால் கோழிகளின் எடையில் வீழ்ச்சி ஏற்படும்.

100க்கு மேற்பட்ட கோழிகளை வளர்க்கும் போது இயற்கை முறையில் தீவின ஏற்பாடுகளை கண்டிப்பாக செய்தல் வேண்டும். காரணம் தீவினச் செலவை எந்தளவுக்கு கட்டுப்படுத்த முடியுமோ அந்தளவிற்கு இலாபமுண்டு.

அத்தோடு இயற்கை முறையில் திறந்த வெளியில் கோழிகளை வளர்ப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகி. நோய் தாக்கம் குறையும். எனவே இயற்கைத் தீவனங்களை தயாரித்து வழங்குவது இன்றியமையாததாகும்.

**இயற்கைத்தீவனங்கள்**

1. கறையான் உற்பத்தி
2. புழு உற்பத்தி
3. சோளன் மற்றும் பயறுச் செய்கை
4. புல்லினங்களை வளர்த்தல்
5. பண்ணைக் கழிவுகளில் உள்ள திறந்த வெளி மேய்ச்சல்.
6. சந்தையில் கிடைக்கும் மரக்கறி கழிவுகள்

தரம் குறைந்த தவிடுகளை கோழிகளுக்கு வழங்குவதால் அவற்றின் எடை அதிரிப்பதில் முன்னேற்றமிருக்காது.

உங்களிடம் பெரியளவு காணியிருப்பின் பண்ணை ஆரம்பிக்குமுன் தீவன ஏற்பாட்டுக்காக சோளம் மற்றும் பயறு போன்ற தானியங்களை மிகையாக பயிரிட்டால் நிறைவாக தீவனம் உங்களுக்கு கிடைக்கும்.

பின்னர் தவிட்டுடன் காய்ந்த கழிவு கருவாட்டு தூள், சோளன் மற்றும் பயறை பொடியாக்கி கலந்து உணவாக வழங்குவதால் கோழிகளுக்கு சரியான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும். வெறும் தவிட்டை கொடுத்து கோழிகளை வளர்க்கலாம் என நினைக்காதீர்கள். முதலில் தீவன ஏற்பாட்டுக்கு வழி செய்யுங்கள்.

உங்கள் நிலத்தில் நிறைவாக புல்லினங்கள் இருப்பின் கோழிகளை தாராளமாக வளர்க்க முடியும். அதுமட்டுமல்லாமல் அதில் உள்ள பூச்சி, வண்டினங்களை



கோழிகள் சாப்பிட்டுவிடும்.

புழு மற்றும் கறையான் உற்பத்தியால் கோழிகளுக்கு தேவையான விட்டமின்கள் கிடைக்கின்றன. இதனால் கோழிகளின் எடை அதிகரிக்கின்றது.

இறைச்சி கழிவுகள் மற்றும் மீன் கழிவுகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி கொடுப்பதன் மூலம் அதிக புரதச் சத்து கிடைக்கும்.

இவ்வாறு பல வகையிலும் நீங்கள் தீவனங்களை தயார் செய்யும் ஏற்பாட்டுடன் இத்தொழிலில் கால்பதித்தால் நிச்சயம் நல்ல இலாபம் அடையலாம்.

கோழிகளுக்கு பல வகை நோய்கள் காலத்திற்கு காலம் ஏற்படுகின்றன. இவற்றுக்கான தடுப்பூசிகளும் மருந்துகளும் இருக்கின்றன.

இருப்பினும் நோய் வராமல் முன்கூட்டியே கோழிகளை பாதுகாப்பதால் பெரும் நட்டத்திலிருந்து தப்பலாம்.

கோழிக்கு வழங்கும் தவிட்டு உணவில் முருங்கையிலை, மஞ்சள், மிளகு போன்றவற்றை அரைத்த கலவையை சேர்த்து வாரம் ஒரு முறை வழங்கினால் கோழிகளுக்கு நோய்கள் வரா.

கோழிக் காய்ச்சல், சளி போன்ற பெரும் நோய்களிலிருந்து பாதுகாக்கலாம்.

எனவே முறையாகத் திட்டமிட்டு தீவினங்களுக்கான ஏற்பாடுகளை தயார் செய்துவிட்டு பெரியளவில் நாட்டுக் கோழிப் பண்ணைகளைத் துவங்குவது நல்லது. ஆறுமாத காலத்திற்கான தீவனம் இருப்பில் பாதுகாப்பில் இருக்கும்போது தாராளமாக பண்ணையை ஆரம்பிக்கலாம்.

அதற்காக பணத்தை கொட்டி தீவனத்தை வாங்கி அள்ளி அள்ளி வழங்கினால் முதலுக்குக் கூட நட்டம்தான் வரும்.

ஒரு கோழிக்கான கிரயம் அதிகமாகி விடும். எனவே அவதானத்துடன் சிந்தித்து செயற்பட்டால் இதை மிகவும் நல்லதொரு தொழிலாக அமைக்கலாம்.

**குறிப்பு**

முதலீடு செய்பவர் அடுத்தவரை நம்பாமல், தன்னம்பிக்கை, விடா முயற்சியோடு பராமரிப்பில் ஈடுபட வேண்டும்,

அல்லது அனைத்தும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்.

அத்தோடு நீங்கள் வெளிநாட்டில் இருந்துகொண்டு இன்னொருவரை நம்பி பண்ணை அமைக்காதீர்கள்.

வெளி நாட்டில் உள்ள நண்பர்களும் இந்த ஆலோசனையை பின்பற்றலாம்,

பெரிய அளவில் செய்ய முற்படும் பண்ணையாளர்கள் மிக கவனமாக இருக்க வேண்டும் அதாவது கோழிகளின் எண்ணிக்கை அதிகமாகும் போது நோய் தாக்கம் சற்று கூடுதலாக இருக்கும்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக என்னை தொடர்பு கொள்ளவும். 0770239784 *

# தோல் பொருள் உற்பத்தி மூலம் சாதிக்கும் பெண்ணின் கதை

**தோல்** பொருள் உற்பத்தியாளர் குமரன் ஜெலினா தமிழர் பொருண்மியம் வாரஇதழுக்கு வழங்கிய நேர்காணல்-

**கேள்வி -** சுய தொழில் ஒன்றை மேற்கொள்வதற்கு உங்களுக்கு உந்து சக்தியாக அமைந்த விடயம் என்ன?

**பதில் -** ஆரம்பத்தில் இருந்தே எனக்கு சுய தொழில் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று விருப்பம் இருந்தது. அது வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன் அந்த நேரம் நான் தெரிவு செய்த தொழில்தான் தோல் பொருள் உற்பத்தி.

**கேள்வி -** இதற்கான பயிற்சிகளை நீங்கள் எப்படி பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில் -** இது எனது சொந்த முயற்சி என்று தான் சொல்ல வேண்டும்.

எனது பிள்ளைகளின் பாவனைக்காக கடைகளில் கொள்வனவு செய்கின்ற புத்தகப் பைகளை பிரித்து அதன் மூலம் தான் சொந்தமாக புத்தகப் பைகளை செய்வதற்கு ஆரம்பித்தேன். ஆனால் இப்பொழுது சிறு தொழில் அபிவிருத்தி பிரிவு மற்றும் கைத்தொழில் அமைத்து போன்றன இதற்கான பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றது.

உங்கள் தொழிலிற்கான மூலப் பொருளை நீங்கள் எந்த வழியில் பெற்றுக் கொள்கிறீர்கள்?

ஆரம்பத்தில் இதற்கான மூலப்பொருட்களை எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய கடைகளில் கொள்வனவு செய்தேன். முக்கியமாக யாழ். நகரில் அமைந்துள்ள சின்னையா சன்ஸ் வியாபார நிலையத்தில் அவசர தேவைக்கேற்ப பொருட்களை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. இப்போது அவற்றைத் தொகையாக பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்.

**கேள்வி -** மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?

**பதில் -** உண்மையில் இது அயலில் கிடைக்கும் வளம் இல்லை... யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் இரண்டு கடைகளில் மாத்திரமே இதனை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நமது மூலப்பொருட்கள் மூன்று மடங்கு விலையேற்றம் கண்டிருக்கிறது.

**கேள்வி -** சந்தையில் உங்கள் உற்பத்தி களுக்கான கேள்வி இருக்கிறதா?

**பதில் -** சந்தை வாய்ப்பை பொறுத்த வரையில் மேல் மாகாணத்தில் இருந்து அதிகப்படியான உற்பத்திகள் வந்து கொண்டிருந்தாலும் பாடசாலை பைகளுக்கான கேள்வி எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது.



## தோல் பொருள் உற்பத்தியாளர் குமரன் ஜெலினா




**நேர்கண்டவர் - ஞா.கவினி**




தரமான உற்பத்திகளுக்கு எப்போதும் சந்தை வாய்ப்பு கிடைக்கிறது.

மற்றும் பாடசாலை பைகளை உற்பத்தி செய்யும் அனைவருக்குமான சந்தை வாய்ப்பை அல அந யனெ லழர என்கின்ற நிறுவனம் வழங்குகின்றது அதனால் சந்தை வாய்ப்பு பற்றிய பயமின்றி பாடசாலை பைகளை உற்பத்தி செய்கின்றோம்.

**கேள்வி -** உங்களது உற்பத்தியோடு சேவையும் கலந்திருக்கிறதா?

**பதில் -** ஆம் எங்களிடம் பாடசாலை பைகளை கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு இலவசமாகவே அவற்றை மீள் திருத்தம் செய்து கொடுக்கிறோம்.

**கேள்வி -** உங்களது தொழிலிற்கான சரியான இயந்திர வசதிகள் உங்களிடம் காணப்படுகின்றனவா?

**பதில் -** இன்னும் முழுமையான இயந்திர வசதி என்னிடம் இல்லை. ஆனால் இன்னும் குறுகிய காலத்தில் எனது தொழிலை சகல வசதிகளோடும் விருத்தி செய்து விடுவேன் என்று நம்புகிறேன்.

**கேள்வி -** எவ்வகையான வாடிக்கையாளர்கள் உங்களை அணுகுகிறார்கள்?

**பதில் -** எங்களிடம் பாடசாலை பைகள் பெண்களுக்கான மற்றும் ஆண்களுக்கான கைப்பைகள் பென்சில் பைகள் மற்றும் பொதுத்தீனுக்கு மாற்றுடான பரிசுப் பைகள் என்று பலவகையான பைகளை உற்பத்தி செய்கின்றோம். தற்போது பாடசாலை பைகளுக்கான கேள்வி மிகவும் அதிகரித்திருக்கிறது எனவே பெற்றோர் மிகத் தரமான பொருளுக்காக எங்களை நாடுகிறார்கள். அத்தோடு my me and you என்கிற எங்களது சுய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி அமைப்பின் ஊடாக தொடர்ச்சியான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்கிறோம்.

**கேள்வி -** உங்களது பாடசாலை பைகளை வாடிக்கையாளர்கள் விரும்புவதற்கு உரிய விசேட தொழில்நுட்பம் என்று எதையாவது கருதுகிறீர்களா?

**பதில் -** ஆம் நாங்கள் மாணவர்களின் தேவைக்கு அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப பைகளை உற்பத்தி செய்கிறோம் முதலாவது மாணவர்களது புத்தகச் சுமைகளை சமன் செய்ய வேண்டும் என்று யோசிக்கிறோம். அதனால் எமது பாடசாலை பையின் தோள்பட்டிகளை பிரத்தியேகமான வகையில் தயாரிக்கிறோம். இன்னும் வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப புதிய தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கு முனைகிறோம்.



**கேள்வி -** உங்களுடைய உற்பத்திப் பைகளை அடையாளம் காண்பதற்குரிய பிரத்தியேக குறியீடு ஏதாவது இருக்கிறதா?

**பதில் -** ஆம் எமது சுயதொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிறுவனமானது ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தத்தம் சொந்த குறியீடுகளில் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கிறது அந்த வகையில் நான் k t bags என்கிற எனது குறியீட்டு பெயரை பயன்படுத்துகிறேன்.

**கேள்வி -** உங்களைப் போன்ற முனைப்பான பெண்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில் -** முடியாது என்று ஒதுங்கி இருக்காமல் முயற்சிக்க தொடங்க வேண்டும். முயற்சியை மூலதனமாக வைத்து முன்னேறியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் சுய சம்பாத்தியம் என்பது முக்கியமாக இருக்கிறது. அது தன்னை நிலைப்படுத்துவதற்கும் தன்னில் தானே நம்பிக்கை கொள்ள வைப்பதற்கும் உதவுகின்றது. குடும்பச் சுமைகளை இணைந்து சுமக்கின்ற போது அது தனி மகிழ்ச்சியை குடும்பத்தில் ஏற்படுத்தும். *

# நிர்வாண அடி!

சிறுவயதில், எங்கள் வீட்டிலே எனக்கு மட்டுமல்ல, மரங்களுக்கும் அடி விழுவ துண்டு. அவைகளும் பாவப்பட்ட ஜென் மங்கள். வளவில் எந்த மரமாவது காய்க் காமல் டிமிக்கி விட்டால், அடிக்காத மாடு படிக்காது என்ற கொள்கைப்படி, கோடாலி யின் பின் புறத்தால் நாலு சாத்து சாத்துவார் கள். அவர்களின் தியறி சில மரங்களில் வேலை செய்ததை நான் நேரில் பார்த்தி ருக்கிறேன். இதன் சூக்குமம், நான் பன்னி ரண்டாம் வகுப்புப் படிக்கும் வரை விளங்க வில்லை. கோடாலியால் அடிவாங்கிய நோவினால் மரங்கள் காய்க்கவில்லை என்றாலும், அடி வைத்தியத்தில் வீட்டாருக் குத் தெரியாத அறிவியல் விளக்கங்கள் பல புதைந்து கிடப்பதை பின்னர் தெரிந்து கொண்டேன்.

ஒரு தாவரத்தில் நீரையும் ஊட்டச் சத் தையும் இலைகளுக்கு கடத்துவது, காழ்க் கலங்கள் (Xylem Cells). இதற்கு வெளியே யுள்ள உரியக் கலங்கள் (Phloem Cells) இலையிலே தயாரிக்கப்பட்ட உணவை, வேருக்கும் தாவரத்தின் மற்றைய பகுதிக ளுக்கும் கடத்துகிறது. கோடாலியால் மரத்தை அடிக்கும்போது, உணவைக் கடத்தும் உரியக் கலங்கள் சிதைக்கப்பட, தயாரித்த உணவின் பெரும்பகுதி தாவரத் தின் கிளைப்பகுதியில் தங்கிவிடும். இத னால் அங்கு உடல் தொழில் மாற்றங்கள் ஏற்பட்டு, தாவரம் பூக்கத் துவங்கும்.

இதற்கும் மேலாக, பலா மரத்தில் இன் னொரு விஷயமும் நடக்கிறது. பலாவில், புதிய அரும்பில் இருந்தே பூக்கள் தோன் றும். கோடாலியால் பலாவில் அடித்த காயம் மாறும் போது, அதிலிருந்து பல புதிய அரும்புகள் தோன்றி பூக்களாகி காயாகும்.

மரத்தைச் சுற்றி நிறைய அடி போட்டால், உரியக் கலங்கள் முற்றாக அறுபட, மரம் செத்துவிடும்.

விவசாய பண்ணைகளில், கூரிய கத்தி யால் அடிமரத்து மரப் பட்டையை அரை சென்றி மீட்டர் அகலத்துக்கு "இடையிடையே" வெட்டிவிடுவார்கள்.

மரம் நிறையக் காய்க்கட்டும்" என்ற பேராசையில், மரத்தைச் சுற்றியுள்ள பட் டையை முழுமையாக வெட்டி வரைந்து விட்டால், அடுத்த வருடம் மரம், விறகுக் குத்தான் பயன்படும். இதை விடுத்து, வெள் ளிக்கிழமைகளில் விரதம் இருந்து மந்திர உச்சாடனம் செய்தபடி கோடாலியால் மரத்தை அடிக்க வேண்டுமென்பதோ, நடு இரவில் நிர்வாணமாய் சென்று அடிக்க வேண்டும் என்பதோ, வெறும் கட்டுக் கதைகளே.



- ஆசி கந்தராஜா -



# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

**கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்**

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சிறு விளம்பரங்கள்

பயறு உளுந்து நிலக்கடலை விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். - 0777 90 6383

கிளிநொச்சியில் நெல் கொள்வனவு செய்கின்றோம் ஜஸ்மின் மில் புளியம்பக்கணை 769966594

காரை நகரில் "பல்லுயிர்" பனை சார் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. +94775789342

முல்லைத்தீவு அளம்மில் பகுதியில் பண்ணை வேலைகளுக்கு ஆள் தேவை. - 0774292500

விசுவமடுவில் பண்ணை வேலைக்கு ஆள் தேவை தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது. - 774939391

ஒரு நாள் பத்து நாள் ஒரு மாத கோழி குஞ்சுகள் விற்பனை பரந்தன் கிளிநொச்சி. - 742242067

கிளிநொச்சி இரணைமடு தானியக்களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்த முடியும். - 773043368

காரை நகரில் நெல் அறுவடை அறுவடை செய்யும் இயந்திரம் தேவை நூற்றுக்கணக் கான ஏக்கர்கள் வெட்டலாம்.- +94 775789342

மரக்கறிகள் பழங்கள் நேரடி வீட்டு விநியோகம். விநியோக கட்டணம் உண்டு. - 0777 90 6383

உழவியந்திர சாரதி தேவை கிளிநொச்சி. -0776737535

வட மாகாணத்தில் இனி வரும் சிறு போகத்தில் இயந்திரத்தினால் நெல் நடவு செய்து தரப்படும். - 0777 90 6383

பகுதி நேர விவசாய NVQ 3 ஏ 4 நேரடி செயல்முறை கல்வி. -0777 90 6383

இயந்திர வாகன உதிரிப்பாகங்கள் தோட்டங்கள் வயல்களுக்கு மற்றும் திருத்தல் நிலையங்களுக்கு நேரடி விநியோகம் கிளிநொச்சி - 765651141

உணவு பால் உற்பத்தி சார்ந்த தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கு அழையுங்கள். - 0772281413

வானிலை தகவல்களை தினமும் இலவசமாக தெரிந்து கொள்ள இந்த இலக்கத்திற்கு ஒருமுறை whatsapp செய்யுங்கள். - 0772984757

விதை இஞ்சி விதை மஞ்சள் தேவை கண்டிக்கு அனுப்பக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். - 0777 90 6383

வட மாகாணத்தில் உயிர் வாயு தொகுதி ஒன்றை பொருத்திக் கொள்ள - 076 310 3565

கொழும்பு யாழ்ப்பாண வாடகை கார் சேவை. மின்சாரக் கார். - 0779744972

இயற்கை முறையில் காய்கறிகள் பழங்கள் உற்பத்தி செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும் விற்பனை வாய்ப்பு செய்து தரப்படும். - 0777 90 6383

அபாகஸ் வகுப்புகள் கிளிநொச்சி - 0094779361624

மாட்டு தீவனத்துக்காக புல் பயிர் செய்கை செய்து தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். ஒரே பிரதேசத்தில் 50 தொடக்கம் 100 ஏக்கர் வரை தேவை. - 0777 90 6383

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. 0777 90 6383

முழு உளுந்து உடைக்கும் இயந்திரங்கள் விற்பனை. லட்சுமி மோட்டார்ஸ் கிளிநொச்சி - 0775070675

இலங்கை முழுவதும் விதைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். - 0763804310

வட மாகாணத்தில் டிப்பரில் கல் மண் கட்டட பொருட்கள் ஏற்றி தரப்படும். - 0094777738536

ரசாயன கிரிமினசினிகள் பூச்சி நாசினிகள் தெளிக்கப்படாத வெள்ளை சிவப்பு அரிசிகள் விற்பனை. - 0777 90 6383

உணவு விற்பனை நிலையங்களுக்கு மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு பஜ்ஜி செய்து தரப்படும். - 0777885114

உள்ளூர் தயாரிப்பு கோழி அடர் தீவனம் விற்பனைக்கு - +94778586884 கல்மடு

மரச்செக்கு சேவைகளுக்கு மோகன் மரச்செக்கு வட்டக்கச்சி - +94770156630

மாட்டுக்கான அடர் தீவனம் விற்பனை - +94778586884 ராணி தீவனம் தருமபுரம்.

கோழி தீவனங்கள் மாட்டு தீவனங்கள் தொகையாக தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும். - +94771117080 கொழும்பு

கிளிநொச்சியில் வீட்டு மின் இணைப்பு நீர் குழாய் பொருத்துதல் வேலைகளுக்கு -742242067

பாரிய ஒருங்கிணைந்த பண்ணைகள் அமைக்கக்கூடிய 25 ஏக்கர் 50 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட காணிகள் தேவை - 0777 90 6383

ஜேசிபி கனரக வாகன சேவை கிளிநொச்சி - 0773597787

தரமான காய்கறி மற்றும் பூ மரக்கன்றுகள் அலங்கார தாவரங்கள் விற்பனை. வன்னி மலர் காடு கிளிநொச்சி +94768965999

பாலிமர் ரப்பர் முத்திரை ஒரு மணித்தியாலத்தில் செய்து தரப்படும். சிவா பிரின்ட்ரஸ் கிளிநொச்சி - 0775346766

விவசாய தகவல்கள் தமிழ் இணைய வலைதளத்திற்கு கட்டுரைகள் ஆக்கங்கள் தேவை. - 0772984757

பிவிசி குழாய்களை மொத்தமாக குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள PVC.LK - கிளிநொச்சி - 0777885114

உங்கள் வியாபாரங்களுக்கு இணைய தளங்கள் மென்பொருள் சேவைகள் வழங்குகின்றோம். - +94774404456 அகமதி குழுமம் Kilinochchi

உங்கள் வீட்டு நல்ல நிகழ்வுகளுக்கு இயற்கையான உடன் தயாரித்த பழரச பானங்களை வழங்குகின்றோம். அம்மாச்சி கிளிநொச்சி - 212285726

Palmera products buying in Jaffna. +94 76 861 7196

Silage for sale Mankulam. 35/= per kg. - 0775138954

பசுமாடும் 3 மாதமேஆன பசுக்கன்றும் விற்பனைக்குண்டு. விலை நேரில். இடம் -திருநெல்வேலி. தொடர்புகளுக்கு 0769303495

நாட்டுமுருங்கை அல்லது தரமான முருங்கை விதைகள், பப்பாளி விதைகள் தேவைப்படுகின்றன. - எட்வின்விஜயரெட்ண -0770083912

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# கால்நடைப் பண்ணைகள் ஏன் தோல்வியடைகின்றன...?



## பகுதி 03


Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

இந்த வாரம் எனக்குத் தெரிந்த பிரம்மாண்டமான ஆட்டுப்பண்ணையொன்று தோல்வியடைந்த கதையையும் அதை எப்படிச் செய்திருந்தால் பண்ணை வெற்றி பெற்றிருக்கும் என்பதையும் சொல்லப் போகின்றேன்...

வவுனியா ஓமந்தைப் பகுதியில் அந்த பண்ணை அமைக்கப்பட்டிருந்தது. அந்த பண்ணையின் உரிமையாளர் புலம்பெயர்ந்தவர். நீண்ட காலத்தின் பின் இலங்கை வந்திருந்த அவர் தனது ஓமந்தையில் உள்ள காணியில் 50அடி நீளமான உயர்த்தப்பட்ட கொட்டகையை அமைத்திருந்தார். இரும்பு ,கொங்கிறீட், தரமான பலகைகள் மூலம் அமைக்கப்பட்டு அஸ்பெஸ்டாஸ் கூரை தகடு மூலம் வேயப்பட்டிருந்த இந்த கொட்டகை எனது அனுமானத்தின்படி 50 லட்சம் பெறுமதியாக இருந்த்து. (2016 பெறுமதி). 200 வரையான யாழ்ப்பாணத்து யமுனாபாரி ஆடுகளால் அந்த பட்டி நிரப்பப்பட்டிருந்தது. உரிமையாளர் யாழ்ப்பாணத்து ஆட்டு மாட்டு வியாபாரி மூலம் அவற்றை சட்ட விரோதமாக கொள்வனவு செய்திருந்தார்.

அங்கு சில ஏக்கர் அளவில் CO3 புற்கள் நடப்பட்டிருந்தன.வேலைக்கு வயதான ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். உரிமையாளர் கொட்டகையை அமைக்கவோ அமைவிடத்தை தெரிவு செய்யவோ ஆடுகளை தெரிவு செய்யவோ கால்நடை வைத்திய ஆலோசனையை பெற்றிருக்கவில்லை. ஆடுகளை பண்ணையின் அருகிலிருந்த குளக்கரையில் மேய்ப்பதும் இரவில் பாலை இத்தி போன்ற மரங்களின் குழையை கட்டி விடுவதும் இந்த பண்ணையின் வாடிக்கை. சினைப்பட்ட ஆடுகள் பல குட்டிகளை ஈன்றிருந்தன.

சில மாதங்கள் சுமுகமாக சென்ற இந்த பண்ணையில் மாரி மழைக்கு பின் பிரச்சினைகள் மெல்ல மெல்ல எழத்தொடங்கின. நுளம்புகள் பெருக்கத்தால் நுளம்பு காய்ச்சல் எனும் சோர்வு வாதம் ஏற்பட்டு பல ஆடுகள் விழத்தொடங்கின. குடற்புழுத் தாக்கம் காரணமாக சிறிய ஆடுகள் கழியத் தொடங்கி ஒவ்வொன்றாக இறக்கத்



தொடங்கின. பெரிய ஆடுகளும் குறிப்பாக குட்டியீன்ற ஆடுகள் மெலிவடைந்து அவையும் கழியத் தொடங்கின. பல ஆடு கள் கீழே படுத்தால் எழும்ப முடியாமல் படுத்தபடியே உணவு உட்கொண்டன. ஆடு மேய்க்கும் வயதானவருக்கு மேய்ப்பது இந்த நோயுற்ற விலங்குகளை பார்ப்பது சிரமமாக இருந்தது. இதற்கிடையில் சில யாழ்ப்பாணத்து ஜேர்சி மாடுகளையும் அந்த மாட்டு வியாபாரியின் பேச்சை கேட்டு வாங்கிவிட்டிருந்த காரணத்தால் அந்த வயோதிபர் அவற்றையும் பார்க்கவேண்டியிருந்தது. அதாவது உரிமையாளர் தனது ஒருங்கிணைந்த பண்ணைக் கனவை ஒரேயடியாக நிறைவேற்றத் தொடங்கியிருந்தார்.

இதற்கு மேலதிகமாக அதே வளவில் கோழிப்பண்ணையையும் உருவாக்க தொடங்கியிருந்தார். அந்த பண்ணையிலிருந்து கால்நடை வைத்திய வசதி மிக தொலைவில் இருந்ததால் கால்நடை வைத்தியர்கள் உடனடியாக வரவும் வழியில்லை. அத்துடன் உயர் ரக ஆடுகள் அந்த பகுதிக்கு பொருத்தமற்ற காரணத்தால் அந்த பகுதிக்குரிய அரச கால்நடை வைத்தியர் அனுமதியை நிராகரித்திருந்தால் ஆடுகளை யாழ்ப்பாணத்தில் இருந்து களவாக கொண்டுவர வேண்டியிருந்ததுடன் இவரது பண்ணையை அரச கால்நடை வைத்திய அலுவலகத்தில் பதிய முடியவில்லை. சிகிச்சைக்கு அவர்களை கூப்பிடவும் வழியில்லாததால் உள்ளூர்ப் பரிகாரிகளை கொண்டும் வவுனியாவிலுள்ள கால்நடை மருந்தகங்களில் சில மருந்துகளை வாங்கியும் சிகிச்சையளித்தும் பார்த்தார். சரிவரவில்லை.அவருடைய கெட்ட காலம் அந்த வருடம் பரம்பிஸ்டோமியோசிஸ் இரப்பை புழு ஆடு மாடுகளை கடுமையாக தாக்கியிருந்தது. அவரின் பல ஆடுகள் குறிப்பாக குட்டிகள் காவுகொள்ளப்பட்டிருந்தன. அங்குள்ள ஆடுகளின் பகல் நேர மேய்சல் அருகிலுள்ள குளக்கரையில் இடம்பெறுவதால் அவற்றுக்கு நத்தைகள் மூலம் பரவும் பரம்பிஸ்டோம் நோய் இலகுவாக தொற்றியிருந்தது. கடைசியில் வேறு வழியின்றி என்னிடம் வந்தார். நான் அவதானித்த கேட்ட பல விடயங்களைத்தான் மேலே பதிவிட்டுள்ளேன்.

உடனடி குடற்புழு மருந்துகள் மற்றும் ஏனைய சிகிச்சைகளைச் செய்தும் பல ஆடுகளை காப்பாற்ற முடியவில்லை. அத்துடன் அவரது சிகிச்சை செய்வதிலும் மேலதிக வேலையாள் பிடிப்பதிலுமுள்ள கஞ்சத்தனத்தையும் புரிந்து கொண்டேன். அவரின் சாகும் ஒவ்வொரு ஆட்டின் பெறும

தியை விடவும் குறைவாகவே ஒரு வேலையாளின் மாதச்சம்பளம் இருப்பதை அவர் உணரவில்லை. பலவீனமான ஆடுகளுக்கு சத்து மருந்துகளையும் தீவனத்தையும் பரிந்துரைத்த போதும் அவர் அதனை பெரிதாக கொடுத்ததை நான் காணவில்லை. அவருடைய கொட்டிலில் இருந்து சரிவர கழிவுகள் அகற்றப்படாததையும் இதனால் அவரிடம் உள்ள பெரும்பாலான ஆடுகள் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாவதையும் அவரின் பல ஆடுகள் வயதானதையும் சுட்டிக்காட்டினேன். குளக்கரையில் மேய்ப்பதன் ஆபத்தையும் ஒரு வயதான மனிதரால் இந்த ஆடு மாடுகளையும் புதிதாக தொடங்கப்பட்ட கோழிக்கூட்டினையும் பார்க்க முடியாது, எனவே புதிய வேலையாள் பிடிப்பதன் அவசியத்தையும் தெரிவித்தேன். அவரின் கொட்டகை அமைவிடம் அமைப்பிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டியும் திருத்தும் வழிமுறைகளையும் சொன்னேன். அவருக்கு தன்னை தன் ஆட்டுக் கொட்டகை அமைப்பைக் குறை கூறுவது பிடிக்கவில்லை. கால்நடை வைத்தியர் வந்து சிகிச்சை செய்யவேண்டும். ஆனால், அவர் எந்த வித முகாமைத்துவ மாற்றமும் செய்யாது வெறுமனே ஊசிகள் மூலம் மாத்திரம் அவை குணமாக வேண்டும் என்பதே அவர் எதிர்பார்ப்பாக இருந்தது. தினமும் நீங்கள் ஊசி போட்ட ஆடுகள் இன்னும் சரியாகவில்லை என தொலைபேசியில் விசனப்படுவார். இறுதியில் உங்கள் பண்ணையை இப்படி செய்து மாற்ற முடியாது உங்களுக்கு ஏற்ற யாரிடமாவது செல்லுங்கள் என சொல்லி விலகிவிட்டேன். சிறிது காலத்தில் வேறு கால்நடை வைத்தியர்கள் இன்றி ஒரு பண்ணைக் கடை வைத்திருந்த நபர் அங்கு சிகிச்சை செய்ததாகவும் கேள்விப்பட்டேன். ஒரு ஐந்து மாதங்களின் பின் அந்தப்பகுதியால் சென்றபோது கொங்கிறீட் கட்டிடங்கள் கொட்டகைகள் சிதிலமாக காணப்பட்டன. ஆடுகளை காணவில்லை. புல் இருந்த இடங்கள் பற்றைகளாக மாறியிருந்தன. விசாரித்தமட்டில் தொடர்ந்து ஆடுகள் இறக்க வேலையாளின் சம்பளத்தில் அவர் பிடிக்க முயல அவர் வேலையை விட்டு விட்டார். பிறகு யார் யாரையோ வேலைக்கு விட்டும் சரியாகவில்லை. வந்த விலைக்கு எஞ்சிய ஆடுகளையும் மாடுகளையும் விற்றுவிட்டார். கடைசியில் அவரும் தன் நாட்டுக்கு சென்றுவிட்டார். அநியாயமாக ஆடுகள் இறந்ததுடன் பெருந்தொகை பணமும் விரயமாகிப்போனது.



இந்த இடத்தில் அவரின் தவறுகள் எவை? அவை எப்படி சரி செய்யப்பட்டிருக்கலாம்.? என்பதை விளக்குகிறேன்.

1. தெரியாத ஆடு வளர்ப்பில் அவர் இறங்கியது மிகப் பெரிய தவறு. எந்தத் தொழிலிலும் முன் அனுபவம் மிக அவசியம்.

2.பொருத்தமற்ற ஆடுகளை பெருமளவில் இறக்கியது அடுத்த தவறு. இதனால் பராமரிப்பு சிரமமானது. முதலில் குறித்த அளவில் ஆடுகளை இறக்கி சிறிது அனுபவத்தை பெற்றபின் பெருமளவு ஆடுகளை வாங்கியிருக்கலாம். அதுவும் அந்த பகுதிக்கு பொருத்தமான ஆடுகளை அவர் வாங்கியிருக்கலாம்..

3.தேவையற்ற விதத்தில் பெரிய கொட்டகையை அதிக செலவில் அமைத்தமை தேவையற்றது. அமைத்த இடமும் பொருத்தமற்றது. ஆடு தெரிவுசெய்யவும் கொட்டகை அமைக்கவும் கால்நடை வைத்தியர் ஆலோசனையை பெற்றிருக்கலாம். அவர் ஆரம்பத்திலேயே அண்ணளவாக ஒரு கோடி வரை செலவிட்டுள்ளதால் பிறகு வரும் தீவன, மருத்துவ செலவுகளை பெரும் சுமையாக கருதினார். இந்த தொழிலுக்கு பொறுமை அவசியம். வருமானம் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னரேயே வரத் தொடங்கும். வருமானத்தை மட்டும் எதிர்பார்த்து ஆடு மாடு வளர்க்க முடியாது. விலங்குகளில் அன்பும் கருணையும் தேவை. விலங்குகளை இயந்திரம் போல கருதாமல் நடத்தும் பண்ணையாளர்களே வெற்றி பெற்றுள்ளனர்.




4.வேலையாளின் வேலைப்பளு அதிகமாக இருந்தது .இன்னொரு வேலையாளை பிடித்திருக்கலாம். வேலையாளின் திருப்தி மிக முக்கியம். வேலைப்பளு அதிகரிக்க அதிகரிக்க அவர் சரிவரப் பண்ணையை பார்க்க மாட்டார். அவருக்கு தகுந்த சம்பளம் தரும் போதுதான் விசுவாசமாக இருப்பார். இல்லாவிட்டால் களவு நடக்கும். 5.ஆட்டையும் மாட்டையும் அருகருகே வளர்த்தமையால் சோர்வு வாதம் போன்ற நோய்கள் ஆடுகளுக்கு ஏற்பட்டன.

6. குளக்கரையில் மேய்ப்பதால் உயிரைப்பறிக்கும் நத்தைகள் மூலம் பரவும் குடற்புழுக்கள் தொற்ற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே ஆடுகளுக்குரிய புற்கள் மர இலைகளை ஆடுகள் வர முதலே வளர்க்க தொடங்க வேண்டும். அப்போதுதான் ஆடுகளுக்கு தொடர்ச்சியான உணவு ஊட்டம் கிடைக்கும்.

7. காலத்துக்கு காலம் குடற்புழு மருந்து தடுப்பூசிகளை கால்நடை வைத்திய ஆலோசனையுடன் செய்ய வேண்டும். கால்நடை வைத்தியர்களை இடைக்கிடையே அழைத்து ஆலோசனைகளை பெறவேண்டும். அவர்களுக்கு செய்யும் செலவுகளை முதலீடாகவே கருத வேண்டும். அவர்களின் சிறிய ஆலோசனைகளும் உங்களுக்கு பெரிய மாற்றத்தை தரும்.

கால்நடைகளுக்கு சிகிச்சை செய்ய பல சட்ட விரோத நபர்கள் ஊர்களில் இருப்பார்கள். செலவு மிச்சம் என்று சொல்லி அவர்களை அழைத்தால் அவர்களுக்கு தெரிந்த கிடைக்கும் ஓரிரு மருந்துகளை பாவித்து உங்கள் பணத்தை கறப்பார்களே தவிர உங்கள் உண்மைப்பிரச்சினை தீராது. மருந்துகளை நேரடியாக பண்ணைக் கடைகளில் வாங்கக் கூடாது. கால்நடை வைத்திய ஆலோசனை அவசியம். இந்த பண்ணையாளர் இந்த தவறுகள் அனைத்தையும் செய்திருந்தார். இப்படியாக இந்த பண்ணையின் வீழ்ச்சிக் கதை அமைந்திருந்தது. அடுத்த வாரம் இன்னொரு கதை. இன்னொரு தீர்வு. தொடர்வோம்......

# அரசாள்வார்...



வேதநாயகம் தபேந்திரன்



"பொறுத்தார் அரசாள்வார். பொங்கினார் காடாள்வார்" இது எமது முன்னோர் கற்றுத் தந்த அனுபவமொழி.

இன்று எமது பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியாளர் பலர் வெற்றி பெறாமைக்குரிய காரணம் பொறுமை இன்மையேயாகும்.

அனுபவம் இல்லாமல் ஆரம்பிக்கப்படும் தொழில்கள் அதிகம். ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்திலேயே பெருமளவான வருமானம் கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு. இவை காரணமாக அனேகச் சுயதொழில்கள் தோல்வியில் முடிவடைகின்றன.

சிறு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு அனுபவங்கள் மூலமாக முன்னேறும் சுயதொழில்களே வெற்றி பெறுகின்றன. அத்தகைய சுயதொழில்கள் பெரும்பாலும் ஓரிரு ஆயிரம் ரூபாக்கள் அல்லது பல ஆயிரம் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படுகின்றன.

சிறியதொரு இலாபத்தைப் பெற்று வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி முன்னேறும் தியாக சிந்தையுள்ள தொழில்களே முன்னேறுகின்றன. வெற்றி காண்கின்றன.

முயற்சிகளில் பொறுமை காக்கும் பண்பு என்பது வெற்றியடைவதற்கு முக்கியமானது.

சுயதொழில்களில் மிக இலகுவாக ஆரம்பிக்கக்கூடியதொரு சுயதொழிலாகக் கச்சான் வியாபாரத்தைக் கூறலாம்.

நான் கிளிநொச்சிக்குப் போய் வரும் நேரத்தில் பஸ்ஸில் கச்சான் விற்கும் ஆண்களையும் பெண்களையும் இயலுமான நேரத்தில் அவர்களது தொழில் அனுபவங்களைக் கேட்டறிவேன்.

ஓர் இளைஞன் தான் காலையில் 8 மணி முதல் இரவு எட்டு மணி வரையில் பஸ்ஸில் ஏறிக் கச்சான் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் நாளாந்தம் பத்தாயிரம் முதல் பதினைந்து ஆயிரம் ரூபா வரையில் கச்சான் விற்க முடிவதாகவும் அதில் அரைக் கரை வாசி இலாபம் வருவதாகவும் கூறினான்.



அதாவது பத்தாயிரம் ரூபாவுக்குக் கச்சான் விற்றால் ஐயாயிரம் ரூபா இலாபம் கிடைக்கும்.

பஸ் போக்குவரத்தில் சீர்குலைவு வரும் ஒரு சில நாள்களைத் தவிர மற்றும்படி தனது வருமானம் பரவாயில்லை என்றான்.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையில் அவன் ஒவ்வொரு பஸ்ஸாக ஏறி ஏறிப் பொறுமை காத்துக் கத்திக் கத்தி வியாபாரம் செய்வதனால் கிடைக்கும் வருமானம் இது.

அதாவது அர்ப்பணிப்புள்ள பொறுமையே அவனது உயர் வருமானத்திற்குக் காரணம்.

இந்த உயர் வருமானத்தைக் கொண்டு நல்லதொரு வீடு வளவு சொந்தமாக ஆளுக்கொரு மோட்டார் சைக்கிள், பிள்ளைகளுக்குத் தரமான கல்வி வழங்குதல் ஆகியவற்றைத் தான் அனுபவிப்பதாகக் கூறினான்.

பலசரக்குக் கடை வியாபாரம் நல்லதொரு இலாபம் தரும் தொழிலாகும். இத் தொழிலில் ஈடுபடும் ஒருவர் தம்மை அர்ப்பணித்துத் தொழிலில் ஈடுபட்டாலேயே இலாபத்தைக் காணலாம்.

இன்று கோயில் திருவிழா, நாளைக் கொரு கல்யாண வீடு, நாளை மறுதினம் ஒரு மரண வீடு உடையார்கட்டுக்குப் போக வேண்டுமெனக் கடைகளைப் பூட்டியோர் தான் செய்தொழிலில் நட்டப்பட்டு ஒட்டாண்டியாகின்றனர்.

இப்படியான நிலைமைகளையெல்லாம் குடும்ப அங்கத்தவர் பங்களிப்பின் மூலமாகச் சாதுரியமாகச் சமாளிப்போர் தான் தொழிலில் வெற்றி காண்கின்றனர்.

விவசாயத்தில் மரவள்ளிப் பயிர்ச் செய்கை ஒரு சீட்டுப் பயிர். பெரிய நிலப் பரப்பில் மரவள்ளித் தடிகளை நட்டு ஏழு எட்டு மாதங்கள் பொறுமையாகத் திறம்பட பராமரித்து வந்தால் கிழங்கு மண்ணில் விளைந்து உரிய பருவத்தை அடைந்ததும் வியாபாரிக்கு அவற்றை விற்று மொத்தமாக வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதாவது காசுச் சீட்டொன்றைப் பிடித்து உரிய காலத்தில் மொத்தமாக வருமானம் பெறுவதுபோல மரவள்ளிப் பயிரும் வருவாயைத் தரும்.

இங்கு பொறுமை தான் தொழிலில் உயர் மூலதனங்களில் ஒன்றாக உள்ளது. பொறுமை காப்போரே வெல்வார்கள்.

எந்தவொரு தொழிலாயினும் பொறுமை காக்கத் தெரிந்தோரே வெல்வார்கள் என்பது வரலாற்றின் பேருண்மை.

# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?



## எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

இண்டைக்கு விடியக்காலமை வெள்ளவத் தைக்குப் போன இடத்தில என்ரை கூட்டாளி ஒருத்தனைக்கண்டனான். வழக்கமா என்னைக் கண்டா பழைய அரசியல்வாதி மாதிரி வளவள வெண்டு கதைப்பான். ஆனா இண்டைக்குப் பேசாம நிக்க என்னடா உன்ரை வீட்டம்மா வழக்கம்போல உன்னை வெருட்டிப்போட்டாவோ எண்டு கேட்டன். என்னண்ணை நீங்க எனக் குச் சரியான பல்லுக்கொதி கதைக்கேலாம இருக்கெண் டான். நான் அட..அப்படியே சங்கதி …நீ .ஒவ்வொரு சனியும் நல்லெண்ணை வைச்சுத் தோயிறனிதானே எண்டன். என்னண்ணை பகிடியே விடுறியள்? இஞ்சை இருக்கிற வேலையளுக்கு நல்லெண்ணை வைச்சுத் தோஞ்சு மினக் கெடேலுமே. சம்போ வைச்சுத்தான் தோயிறனான் அண்ணை எண்டான்.

நான் அவனிட்டை எட பேயா! நல்லெண்ணெய் வைச்சு ஒவ்வொரு சனியுந்தோஞ்சா உந்த பல்லுக்கொதி கண்குத்து காது குத்து மண்டை இடி ஒண்டும் வராதெல்லே எண்டன். உதைத்தானே அவ்வையார் சனி நீராடு எண்டு சொன்னவ தெரியாதோ எண்டன்.அதோட சாப்பாட்டுக்கும் நல்லெண்ணை சேத்தா சலக்கொதி மூலக்கொதி வயித்தெரிச்சல் சமியாக்குணம் மேலால கீழால போற வாய்வு கொலஸ்றோல் எண்டு ஒரு கோதாரியும் வராது எண்டன் . உனக்கு ஒருவிசயம் தெரியுமே குத்தரிசிச்சோறு நல்லெண்ணை விட்டுக்குழைச்ச அம்மியில அரைச்ச இஞ்சிச் சம்பல் அஞ்சாறு உரிச்ச சின்ன வெங்காயம் தான் அடிக்கடி என்ரை மத்தியானச் சாப்பாடு. சம்பலுஞ் சோறுந்தான் சாப்பிட்டனான் எண்டு சொல்லுறதிலை வீட்டம்மா பேசுற மாதிரி ஒரு வெக்கமும் எனக்கில்லைக் கண்டியோ .

சாப்பாட்டில நல்லெண்ணையும் இஞ்சியும் சின்ன வெங்காயமும் நல்லெண்ணை முழுக்கும் எத்தினையோ விசயங்களுக்கு நல்லம் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. அப்புவும் ஆச்சியும் உந்தச்சாப்பாடு அடிக்கடி சாப்பிடுவினம். நல்லெண்ணைத் தோய்ச்சல் குளிப்பு ஒழுங்கா நடக்கும் . அவைக்கு கண்ட கிண்ட வருத்தம் வாதை வந்து நான் ஒருநாளும் பாக்கேல்லை. அப்பு ஆச்சி நல்லெண்ணை வைச்சுத் தோயிறது ஒரு பெரிய புறோசஸ். அப்பு விடியவே தலைக்கு கொஞ்ச எண்ணை வைச்சுக் கொண்டு ஆட்டிறைச் சிப்பங்கு வாங்கப் போடுவார். அப்பு இறைச்சியை வெள்ள ணக் கொண்ணந்ததுமே ஆச்சியும் தலையிலை வைச்ச கொஞ்ச நல்லெண்ணையோட இருந்து கொண்டு வந்த கறியை நோண்டிக் கழுவி கறிவைச்சு சோத்து உலையை வைப்பா.

பேந்து ரெண்டு பேரும் முத்தத்தில இருந்து ஆளாளுக்கு நல்லா தலை கைகால் எண்டு எண்ணை பிரட்டித் தேய்ப்பி னம் . அப்பு ஒரு கோமணம் கட்டி இருப்பார் ஆச்சி பாவாடை யைத் தூக்கி இடைக்கட்டு கட்டியிருப்பா உப்பிடி எண்ணை பிரட்டுறதைத்தான் இப்ப பொடி மசாஜ் எண்டுகினம் அதுமட்டுமே அதுக் கெண்டு காசையும் செலவழிக்கினம். நல்லா எண்ணை பிரட்டித் தேச்ச பிறகு அப்பு சிரட்டையில கொஞ்சம் கறி எடுத்துக் கொண்ணந்து முத்தத்து வேப்ப மரத்துக்குக் கீழை வைப்பார். பேந்து காலமையே வாங்கியந்து வேலிக்கரை பூவரசுக்கு கீழே வைச்ச கள்ளுப்போத்திலை எடுத்தந்து மண லிலை இருந்துகொண்டு கள்ளைச் சிரட்டையில ஊத்தி இறைச்சியையும் இடைக்கிடை சப்பிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமா வாயை சிரட்டையிலை பட் டும் படாம வைச்சுக்கொண்டு ரசிச்சு ரசிச்சுக் குடிப்பார்.

அப்பு கள்ளுக்குடிச்சுக்கொண்டு இருக்கேக்கை ஆச்சி செவ வரத்தம் இலை இல்லாட்டில் முசுட்டை இலையோடை வெந்தயம் எல்லாம் எடுத்து சீயக்காயோட சேத்து பழைய உரலில இடிச்சு எடுத்து ஒரு சட்டியிலை போட்டு அதுக்குள்ளை பழங்கஞ்சியை விட்டுக்கலக்குவா. பேந்து அப்பு கள்ளுக் குடிச்சு முடிய ரெண்டு பேரும் கிணத்தடிக்குப் போவினம். கிணத்தடிக்குப்போனா அப்பு ஆச்சிக்கு தண்ணி அள்ளித் தலையிலை ஊத்துவார். பேந்து அவவுக்கு சீயக்காயைப் பிரட்டித்தண்ணி ஊத்துவார். பேந்து ஆச்சி அப்புவுக்கு இதே மாதிரி சீயக்காய் பிரட்டித்தண்ணி அள்ளி ஊத்துவா.

பேந்து ரெண்டு பேரும் மாறி மாறி மூண்டு மூண்டு வாளி சோஞ் சொல்லி ஊத்தி தோஞ்சு முடிப்பினம்.சிவம்..சிவம் .. எண்டிறதைத்தான் அவை சோஞ்..சோஞ்..எண்டிறவை. சிலர் சுகம் சுகம் எண்டிறதைத்தான் சோஞ்..சோஞ்..எண்டி றவை எண்டுவினம் .பேந்து அப்புவின்ரை பழைய நாலு முழத்தால ரெண்டு பெரும் ஆளாளுக்கு மாறி மாறி ஈரந்து டைப்பினம். பேந்து ஆச்சி ஒரு சின்னப் பழஞ்சீலையை தலையில மயிரோட சேத்து முடிவா.பேந்து சாமி கும்பிட்டு முடிய அடுக்களைக் குந்தில இருந்து இளச்சூட்டுச் சோத்தை ஆட்டிறைச்சிகறியோட சாப்பிட்டுப் போட்டு தலைவாசல் குந்தில நல்ல ஒரு நித்திரை அடிப்பினம்.

உண்ணானச் சொன்னா உப்பிடியான சாப்பாட்டு முறை யால வாழ்க்கை முறையால அப்புவுக்கும் ஆச்சிக்கும் எப்ப வும் காதலர்தினந்தான். டேற்றிங் மேற்றிங் எல்லாம் ஒழுங்கா நாலு சுவருக்கை தாராளமா நடக்கும். சிலவேளை பகலிலை என்னதான் சண்டை பிடிச்சினம் எண்டாலும் இரவிலை கப்சிப். அவை ஒருநாளும் பொலிசு கோடு கச்சேரி டிவோஸ் எண்டு அங்கையும் இஞ்சையும் அலைஞ்சு கொண்டு திரி யேல்லை . அப்புக்காத்து பிரக்கிராசிக்கு பின்னும் முன்னும் திரிஞ்சு காசைக் கரியாக்கேல்லை. கனகாலமா அவை லிவிங் ருகெதறாத்தான் இருந்தவை. திகட்டத் திகட்ட வாழ்க்கை யின்ரை ஒவ்வொரு கணத்தையும் அணுவணுவாக அனு பவிச்சவை.

ஆரும் அப்பு ஆச்சியின்ரை வாழ்க்கையை இப்பவும் அனு பவிக்கலாம். ஆனா என்ன? ஆச்சியின்ரை பாசையில சொல் லிறதாய் இருந்தால் அதுக்கெல்லாம் ஒரு குடுப்பினை இருக்க வேணும்.

# குறைந்த செலவில் அசோலா உற்பத்தி



பெரணி வகையைச் சேர்ந்த நுண் தாவரம் அசோலா. கறவை மாடுகளுக்குச் சிறந்த தீவனம். பசுக்களுக்குத் தினமும் இதைக் கொடுத்துவந்தால், 2 லிட்டர் கூடுதல் பால் கிடைக்கும் என்கின்றனர் கால்நடை வளர்ப்பு ஆர்வலர்கள்.

அசோலாவைக் கால்நடைகள் ருசித்து உண்ணும். உடல் ஆரோக்கியத்துக்குத் தேவைப்படும் அமினோ அமிலங்கள், உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தாதுக்களான கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து, துத்தநாகம், மாங்கனீஸ், விற்றமின்கள் போன்றவற்றை யும் உள்ளடக்கிய அற்புதச் சக்தி படைத் தது அசோலா. அது மட்டுமல்லாமல் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, புரதச் சத்து நிறைந்தது.

அசோலாவைக் கறவை மாடுகளுக்குக் கொடுக்கும்போது, ஏறத்தாழ இரண்டு லிட்டர்வரை கூடுதலாகப் பால் பெற முடியும். கறவை மாடுகள் மட்டுமின்றி முயல், பன்றி, வெள்ளாடு, செம்மறி ஆடு, கோழி, மீன் போன்றவையும் விரும்பி சாப்பிட்டால், எடை கூடும். கோழிகளுக்கு அசோலா கொடுக்கும்போது முட்டையிடுவது அதிகரித்து, உடல் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவும்.



அசோலாவை முதன்முதலில் கறவை மாடுகளுக்குக் கொடுக்கும்போது தினம் 100 முதல் 200 கிராம் என்ற அளவில் ஆரம்பித்து, படிப்படியாக 1 முதல் 1 கிலோ வரை கொடுக்கலாம்.

முதலில் 6 அடி நீளமும், 4 அடி அகலமும் ஒன்று முதல் 1 அடி வரை ஆழமும் கொண்ட குழிகளை வெட்டிக்கொள்ள வேண்டும். அதனுள் தடிப்பான பிளாஸ்டிக் பேப்பர், தார்ப்பாயை விரித்துக் கொள்ள வேண்டும். முதலில் அரை அடி உயரததுக்குச் செம்மண் கலந்த தோட்டத்து மண்ணைப் போட வேண்டும்.

நாட்டுப் பசுஞ் சாணம் 3 கிலோவரை, வேப்பம் புண்ணாக்கு 50 முதல் 100 கிராம்வரை போட்டு, சுமார் அடி தண்ணீர் இருக்குமாறு விட வேண்டும்.

தண்ணீர், மண், சாணம், புண்ணாக்கு ஆகியவற்றைச் சிறிது நேரம் கிளறிவிட வேண்டும். அதன்பின் சுமார் - முதல் 1 கிலோ வரை அசோலா விதைகளைத் தூவ வேண்டும். 10 முதல் 15 தினங்களில் தொட்டி முழுவதும் அசோலா வளர்ந்து விடும்.

இதிலிருந்து தினமும் - கிலோ தொடர்ந்து எடுத்துக்கொள்ளலாம். கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அசோலா படுக்கைக் குழிகளைத் தயார் செய்துகொள்ளலாம்.

வாரம் ஒரு முறை ஒரு கிலோ நாட்டுப் பசுஞ் சாணம், போட வேண்டும்.

ஒவ்வொரு மாத முடிவிலும் தொட்டியில் உள்ள மண்ணில் ஒரு பகுதியை எடுத்துவிட்டு புதிதாக தோட்டம் மண் அதற்கு ஈடாக இட வேண்டும்.

தண்ணீரின் அளவு 7 முதல் 10 செ.மீ. வரை இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

10 - 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீரைப் பாதி அளவுக்கு வெளியேற்றிப் புது நீரை மாற்ற வேண்டும். 6 மாதங்களுக்கு இதிலிருந்து தினமும் அசோலா அறுவடை செய்யலாம். அதிவேகமாக வளரும் தன்மை கொண்ட காரணத்தால், தினமும் அசோலாவை எடுத்துக்கொண்டு புதிதாக வளர்வதற்கு இட வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எந்த நிலையிலும் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போக விட்டுவிடக் கூடாது. நேரடி வெய்யில் பிடிக்காவண்ணம் பார்க்க வேண்டும் வலை அமைத்தலும் நல்முறையாகும்...

அசோலா வளர்ப்பது சுலபமானது மட்டுமல்ல, கால்நடைகளின் தீவனத் தேவையைப் பூர்த்திசெய்வதுடன், அடர் தீவனத்துக்குச் செய்யும் செலவும் குறைய வாய்ப்புள்ளது.

கறவை மாடுகளுக்குக் கொடுக்கிற அடர் தீவனமான பருத்திக்கொட்டை, தவிடு, புண்ணாக்கு போன்றவற்றைப் பாதியாகவோ அல்லது மூன்றில் ஒரு பங்காகவோ குறைத்துக் கொள்ளலாம். அசோலா உற்பத்தி செய்ய 1 கிலோவுக்கு 2 ரூபாய்க்கும் குறைவாகவே செலவாகும். 25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நன்கு செழித்து வளரும்.

கடுமையான பகல் நேர வெயில் நேரடியாகப் படும் வகையில், அசோலா வளர்ப்புக் குழிகளை அமைக்கக் கூடாது. பகல் நேர வெயில்படாத வகையில், மேலே பச்சை துணி கட்டி நிழல் படுமாறு அமைக்க வேண்டும்.

அல்லது தொட்டிகளை மரத்திற்கு கீழே அமைக்கவேண்டும்.

காலை, மாலை நேரச் சூரியனின் இளம் வெயில் அசோலாவுக்கு மிக மிக நல்லது.

அசோலாவைக் கால்நடைகளுக்கும். கோழிகளிற்கும் கொடுக்கும் முன்பு, நான் கைந்து முறை தண்ணீரில் அலசிக் கொடுக்க வேண்டும். அசோலாவில் சாணத்தின் மணம் இருந்தால், கால்நடைகள் உண்ணாமல் போய்விடக்கூடும். சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரில் அலசும் போது வரும் சிறிய செடிகளை, மீண்டும் அசோலா வளர்ப்பு தொட்டியிலேயே விட்டு விட வேண்டும்.

கால்நடைகள் அசோலாவை சுலபமாக ஜீரணித்துக்கொள்ளும். அடர் தீவனத்துடன் கலந்தும் தனியாகவும் பசுந்தீவனத்துடன் கலந்தும் கொடுக்கலாம்.

அசோலா விதைகளை நெல் நாற்று வயல்களில் தூவிவிட்டால், வயலில் தண்ணீர் தேங்கி இருக்கும்போது நன்கு செழித்து வளரும். தண்ணீர் இல்லாமல் வற்றிப் போகும்போது, அசோலா மக்கி உரமாகிப் பயிருக்கு ஊட்டம் கொடுக்கும். அதன் மூலம் உரச் செலவைக் குறைக்கலாம்.

புதிய அசோலா விதைகளை 5 - 6 மாதங்களுக்கு ஒருமுறை இட வேண்டும். அப்படிப் இடும் முன்பு தண்ணீரில் உள்ள இலை, தழை குப்பைகளை அகற்றி விட வேண்டும். *

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2023இல் வெளியிடப்பெற்றது.